பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 15 | வெள்ளிக்கிழமை | (27-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 70




# ஐ.ம.சு.மு. ஆட்சி அமைத்ததும்

# சமாதான முயற்சி தொடரும்



## முதலாவது பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி உரை

(அனுராதபுரம்)

**ஏப்பிரல் மாதம் 2ம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்று ஆட்சிபீடம் ஏறிய பின்னர் தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் என்றும், யுத்தநிறுத்த உடன்படிக்கையை பாதுகாக்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் செயற்பட்டு வருவதையிட்டு தான் மகிழ்ச்சி அடைவதாகவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அனுராதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.**

அனுராதபுரம் ஜெயஸ்ரீ மகா போதியில் இடம்பெற்ற மத வழிபாடுகளை அடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் அனுராதபுரம் பொது மைதானத்தில் நடைபேற்றது.

நேற்றுப் பிற்பகல் 3.00மணிக்கு ஆரம்பமான இக் கூட்டத்தில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தொடர்ந்து பேசுகையில்;

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, தனக்கும் அமைச்சரவைக்கும் தெரியாமல் இரகசியமான முறையிலேயே விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்திருந்தார்.

பிரதமர் நடந்து கொண்ட இந்த

(12ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண

# ஐ.ம.சு.மு. எந்த திட்டமும் இல்லை

## பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் ரணில் உரை

(கண்டி)

நாட்டை அபிவிருத்தி அடையச் செய்யும் நோக்குடன் தெளிவான செயல் திட்டங்களை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன்னெடுத்துச் சென்று கொண்டு இருக்கையில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுக் கண்டியில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் கண்டியில் நடைபெற்ற போது அங்கு உரையாற்றும் போதே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

கண்டி பொதுச்சந்தை மைதானத்தில் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்,கட்சித் தலைவர்கள் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளிடம் ஆசி பெற்றதுடன் இந்து, கிறிஸ்தவ குருமாரிடமும் ஆசி பெற்றனர்.

இதன் பின் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கா தொடர்ந்து உரையாற்றுகையில்,

(12ம் பக்கம் பார்க்க)



## சத்திரச்சந்தி லொறி விபத்தில் காயமடைந்த நபர் நேற்று மரணம்

### சடலத்தை இனங்காட்டக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியில் கடந்த 24ம் திகதி லொறி மோதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் நேற்று மரணமானார்.

மஞ்சள் நிற வேட்டியும், பெனியனும் அணிந்த சுமார் 49 வயது மதிக்கத்தக்க பிரஸ்தாப நபரின் சடலம் உரிமை கோரப்படாத நிலையில் வைத்தியசாலை பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காக வைக்

(12ம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டை விநியோகம் மார்ச்மாதம் 18ம்திகதி ஆரம்பம்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள், மார்ச் மாதம் 18ம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை, எதிர்வரும் 25ம் திகதிக்குள் நிறைவு செய்யத் தீர்மானிதிருப்பதாகவும், தபால்மா அதிபர், கே.ஏ.சேனாதீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு நலன் கருதி வடக்குக்கான வாக்காளர்

(12ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில்

# வலம்புரி-சங்குநாதத்திற்கு எதிராக பத்திரிகையாளர் சங்கம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

வலம்புரியின் வாரமலர் சங்குநாதத்திற்கு எதிராக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறையீடு செய்துள்ளது.

2003 டிசம்பர் முதலாம் வாரத்தில் வெளியான சங்குநாதத்தில் ஆதித்தன் எழுதிய 'ஆலடி மாநாடு' என்ற பகுதியில் குறிப்பிட்ட விடயங்கள் குறித்தே இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பியினால் மட்டும் கையொப்பமிடப்பட்டு முறையீடு செய்யப்பட்ட முறையீட்டுக் கடிதம், அது தொடர்பாக ஆணைக்குழு வலம்புரி-சங்குநாதத்திற்கு அனுப்பிவைத்த கடிதம் ஆகியவற்றின் விபரம் வாசகர்களுக்காக இங்கே முழுமையாக 2ம் பக்கத்தில் தரப்படுகிறது.

## நேற்று மட்டும் 31 வன்முறைகள்

(கொழும்பு)

நேற்றுக்காலை 6.00 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களுக்குள் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 31 முறைப்பாடுகள் பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட 31 முறைப்பாடுகளில் 29 முறைப்பாடுகள் குற்றவியல் சட்டங்களை மீறுவனவாகவும் ஏனைய 2முறைப்பாடுகளும் தேர்தல் சட்டத்தை மீறுவதாகவும் உள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

(12ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியில் பிரசாரம் செய்ய பாதுகாப்பு வழங்குக

### ஈ.பி.டி.பி-பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை

(லண்டன்)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு பிரசார நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மேற்கொள்வதற்கு தங்களுக்கு பொலிஸார் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று ஈ.பி.டி.பியினர் பொலிஸ்மா அதிபரைக் கேட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வசிக்கும் மக்களுக்கு தமது கொள்கைகள், தமது கட்சியின் செயற்பாடுகள் என்பன குறித்து விளக்க வேண்டும் என்பதற்காகவே இப் பாதுகாப்பு அனுமதியை கேட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதேவேளை ஏ-9பாதையூடாக தமது கட்சி உறுப்பினர்கள் பிரயாணம் செய்வதற்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் பொலிஸ்மா அதிபரை கேட்டுள்ளார்.

(ச)



# வலம்புரி-சங்குநாதம்...

வட.இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி சங்குநாதத்தில் வெளியான ஆலடி மாநாட்டிற்கு எதிராக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரதி;

18, Kumarasamy Road,
Kantharmadam
Jaffna.
09.12.2003.

The Executive Officer,
Press Complaint Commission,
Colombo.

Sir,

**Complaint against "Sangunatham" – a Tamil weekly published by Valampuri Newspaper in Jaffna**

We wish to bring to your notice a defamatory story published in the "Sangunatham" of 1st December 03 page 04 under the caption "Bo – tree conference" defaming me and the North Sri Lanka Journalists Association of which I am the President.

I am 76 years old and a respected citizen in Jaffna holding a position of recognition in the Jaffna peninsula.

I am graduat of the University of Calcutta and was a principal for 15 years promoted to Sri Lanka Educational & Administrative service (S.L.E.A.S). I am a Justice of the Peace for the whole Island. I am the Joint President of North South Journalists Association and the President of North Sri Lanka Journalists Association. I am also the President of Sri Sathiya Sai Baba Samithi in my village. I am the Jaffna Special correspondent of the Lake House Group of papers for the last 41 years.

Thus in the field of educational, journalistic, social service and spiritual services. I hold a place of recognition and distinction in Jaffna.

The story published in Sangunatham is calculated to defame and denigrate my reputation and to discredit the activities of our Association.

The story has caused us pain of mind and considerable loss of reputation. I am herewith annexing a photocopy of the defamatory publication for your perusal and necessary action. The English transaliton of the defamatory passages are also annexed for your perusal.

I wish to add that I am prepared to refute all the vilifications and scandals smeared against me as baseless, malicious and derogatory.

The address of "Sangunatham" is given below for your information.

The Publishers,
Sangunatham,
Valampuri & Co,
No.15, Vellam Theru,
Jaffna

Yours Faithfully,
President.

வட.இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவரின் முறைப்பாட்டுக் கடிதம் தொடர்பாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு வலம்புரி-சங்குநாதத்திற்கு அனுப்பிவைத்த கடிதத்தின் பிரதி;

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

ICLP Arbitration Centre,
61, Carmel Road,
Colombo 3, Sri Lanka.
Telephone: 075-333002, 075-333006, 075-333008
Fax: 075 335500
E mail: pccsl@lankabellnet.com

15 Ward Pl
Col 7

10.02.2004
PCC/ COM/ 52 / 2003

ஆசிரியர்,
சங்குநாதம்,
இல: 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

அன்புள்ள ஐயா,

தங்களது 01 - 07.12. 2003 ஆம் திகதி சங்குநாதம் பத்திரிகையில் 4ஆம் பக்கத்தில் "ஆலடி மாநாடு" என்ற தலைப்பில் வெளிவந்த கருத்துக்கள் தொடர்பாக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் திரு. கதிர்காமத்தம்பி எமது பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் தனது முறைப்பாட்டில் மேற்படி பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அதனால் அவருக்கும் அவரது சங்கத்துக்கும் களங்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு மேற்படி விடயத்தினால் தனது சொந்த வாழ்க்கைக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் மேற்படி கருத்துக்களில் எந்தவிதமான உண்மையும் இல்லை எனவும் தான் இதன் மூலம் மனமுடைந்து போயுள்ளதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தான் மேற்படி பத்திரிகையில் பிரசுரமான கருத்துக்களை முற்றாக மறுப்பதாகவும் அவை தன்மீது சேறு பூசுவதற்காகவே பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதனால் இவ்விடயம் தொடர்பாக போதிய முக்கியத்துவம் வழங்கி அவருக்கு நியாயம் ஒன்றை பெற்றுக்கொடுக்குமாறு இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அன்புடன் கேட்டுக்கொள்கிறது. மேலும் தங்களது பதில் நடவடிக்கை குறித்து எமக்கு 3 நாட்களில் பதில் கடிதம் அனுப்புமாறு எமது ஆணைக்குழு பணிவுடன் கேட்டுக்கொள்கிறது.

நன்றி

இப்படிக்கு
உண்மையுள்ள

மெனிக் மெண்டிஸ்,
பிரதம நிறைவேற்று அதிகாரி,
இல: 65/5 வோர்ட் பிளேஸ்,
கொழும்பு-07.

பிரதி:- திரு எஸ். கதிர்காமத்தம்பி B. A. (J. P.)
இல: 18, குமாரசுவாமி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# 19 நிலையங்களில் ஞாயிறன்று சைவசமய அறிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவ சமய அறிவு பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு குடாநாட்டில் உள்ள 19 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தரம் 3தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த எழுத்துப் பரீட்சையில் சுமார் 3ஆயிரத்து 600 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக செயலாளர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (உ)

# மானிப்பாய் சன சமூக நிலைய சமாசம் உ.உ. ஆணையாளரிடம் வேண்டுகோள்

(மானிப்பாய்)

மானிப்பாய்ப் பிரதேச சன சமூக நிலையங்களின் சமாசம், அதன் தலைவர் ஜே.யோன்சிங்கம் தலைமையில் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வீ.இராசையாவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

இக்கலந்துரையாடலில் சமாசம் சில கோரிக்கைகளை முன்வைத்தது. அவையாவன,

❄ சமாசத்திற்கான ஒரு நிலையான அலுவலகம் ஒன்றினை மானிப்பாய்ப் பிரதேசக் கட்டடத்தில் இருந்து பெற்றுக்கொடுத்தல்.

❄ கட்டுடை, ஆனைக்கோட்டை பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்கென வவுசர்மூலம் நீர் பெற்றுக்கொடுத்தல்.

❄ உலக உணவு திட்டத்துடன் காக்கைதீவுச் சுடலை வீதியைப் புனரமைத்தல்.

❄ முன்பள்ளி ஆசிரியருக்கான சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தல்.

என்பன கொள்கை அளவில் இதனை ஏற்றுக்கொண்ட உதவியாளர் ஒருசில மாதங்களில் இதனை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்துள்ளார். (யே-95)

# தளபாடம் திருடியோரை காவல்துறை கைதுசெய்தது

(மருதங்கேணி)

இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் களவு போன தளபாடங்கள் தமிழீழ காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த 16ஆம் திகதி இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் 23ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் களவு போயுள்ளதாக மேற்படி பாடசாலை அதிபர் பளை காவல்துறையினருக்கு செய்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து காவல்துறைப் பணிமனையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கை காரணமாக சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன் குறித்த தளபாடங்களை உடையார் கட்டுப் பிரதேசத்திலிருந்து மீட்டுள்ளனர். சந்தேகநபர்கள் கிளி நொச்சி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர். (யே-35)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(கொழும்புத்துறை)

யாழ்.சென்ஜோசப்ஸ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00மணிக்கு அதிபர் எம்.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரீ.அருணகிரிராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக சென்ஜோசப்ஸ் குருமட அதிபர் அருட் தந்தை எஸ்.எட்வின் வசந்தராஜா, பாசையூர் பங்குத் தந்தை அருட் தந்தை எம்.ஜேசுரெட்ணம், யாழ்.இளைஞர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை சாள்ஸ் கொலின் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.(ச-51)

• • • • • •

(வடலியடைப்பு)

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.00மணிக்கு அதிபர் க.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் வடக்குக் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.ஆனந்தராஜ் கலந்து கொள்ளவுள்ளார். (ச-21)

• • • • • •

(வடலியடைப்பு)

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகளிர் கல்லூரி ஆகியவற்றின் இல்ல மெய்வன்மைத் தேர்வு நாளை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி அதிபர்களான கு.சண்முகநாதன், திருமதி சூ.ஜெயவீரசிங்கம் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி க.சிவனடியான், திருமதி சௌ.சிவனடியான், மானிப்பாய் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி வி.பசுபதிப்பிள்ளை ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் ரீஹரீவிமலேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-21)

# மாணவர்களுக்கு நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவருக்கிடையில் வலய மாவட்ட தேசிய ரீதியில் நாடகப் போட்டி ஒன்றை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடாத்தவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5வலயங்களையும் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியும்.

இந் நாடகப் போட்டியில் பங்கு பற்றவிரும்பும் பாடசாலைகளின் பெயர் விபரங்களை நாளை சனிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட செஞ்சிலுவைச் சங்க செயலாளர் எஸ்.விக்னேஸவரன் யாழ்.மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் 6 பாடசாலைகள் வலய மட்டப்போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-3)

# விண்ணப்பம் கோரல்

(பொன்னாலை)

எதிர்வரும் மார்ச் மாதம்13,14ம் திகதிகளில் வடமராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே சதாவதானி கதிரவேற்பிள்ளை குருபூசைத் தினப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் உடனடியாக செயலாளர் சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம் தம்பசெட்டி பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதன் செயலாளர் ஜெயநிமலன் கேட்டுள்ளார். (யே-49)

# சூட்டுக்குப் பலி

(ஹொரவப்பொத்தானை)

ஹொரவப்பொத்தானை கெல்லன் கடவெல பகுதியில் வைத்து ஊர்காவற்படை வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். நேற்று முன்தினம் இடம் பெற்ற இனந்தெரியாதோரின் இத்துப்பாக்கிச் சூட்டில் மேலும் ஒரு ஊர்காவற் படைவீரர் காயமடைந்துள்ளார். (உ-61,4)

# இந்தோனேஷியாவில் பரவிவரும் டெங்குக் காய்ச்சலால் 255 பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் பரவிவரும் டெங்குக் காய்ச்சல் காரணமாக 255 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.


ஆயிரக் கணக்கானோரைப் பீடித்துள்ள டெங்கு வைரஸ் பற்றிய சோதனைகளின் இறுதி முடிவுக்காகக் காத்திருப்பதாக இந்தோனேஷிய சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது வரை 13 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் காய்சசல் தொடர்பான அறிவுறுத்தல்களைப் பல்வேறு வழிகளில் பொது மக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(து-2)



படத்தில் இருப்பவர் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அல்ல. பெங்களூரைச் சேர்ந்த தீபக் திவேகர். இவர் பெங்களூரில் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் பணி புரிகிறார். திரைப்படங்களில் முஷாரப் வேடமேற்று நடித்துள்ளார். விரைவில் பா.ஜ.க.வில் சேர்ந்து தேர்தல் பிரசாரம் செய்ய உள்ளார்.



**அனுவாயுத ஒழிப்பு சம்பந்தமாக அமெரிக்க அதிகாரிகளும் ஐ.நா.அதிகாரிகளும் வடகொரியாவில் தற்பொழுது சுற்றுப்பேச்சுக்களை மேற்கொண்டு வருவதைப் படத்தில் காணலாம்.**

# கலவரங்களால் விரட்டப்பட்ட 200 வட உகண்டா அகதிகள் கொலை

(கம்பாலா)

வடக்கு உகண்டாவில் இருந்து கலவரங்களால் விரட்டப்பட்டு தெற்கு உகண்டா முகாம்களில் வாழ்ந்து வரும் 200 அகதிகள் கொல்லப்பட்டனர்.

இக் கொலைகளில் சம்பந்தப்பட்டவர்களென அஹோலி இனக் குழு கலகப்படையினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைக் கும்பலை எதிர்த்து உகண்டா பொது மக்கள் டிரான் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியிருக்கின்றார்கள்.

இந்த சம்பவத்தையடுத்து, இந்த கொலைக்குக் காரணமான 21பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்றும்,

இக்கலகப் படையினருக்கு நிதி வழங்கும் நாடுகளே இக்கலகப் படையினரை அடக்க முடியாதமைகைக் காரணமென்றும் உகண்டா ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

படையினருக்கான செலவினங்களைக் குறைத்துக் கொள்ளுமாறு நிதி வழங்கும் நாடுகள் கோருவதால் தம்மால் கலகக் காரர்களை எதிர்த்துப் போராடப் போதிய ஆயுதங்கள கொள்வனவு செய்ய முடியவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(து-2)

## யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்ற வியட்நாம் -அமெ.ஒப்பந்தம்


யுத்தகாலத்தில் வியட்நாமில் புதைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு அமெரிக்காவும் வியட்நாமும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்தத் திட்டத்திற்கு 60 இலட்சம் அமெரிக்க டொலர் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

8 இலட்சம் தொன் எடையுள்ள நிலக்கண்ணிவெடிகள் வியடநாமில் புதைக்கப்பட்டிருப்பதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

அமெரிக்கா, வியட்நாம் யுத்தத திற்குப் பின்னர் 1995இல் இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டன.

(து-2)



**சந்தேகத்திற்குரிய வடகொரியாவின் அனுவாயுத உற்பத்தி நிலையம் இது தான் என்று, அமெரிக்கா குற்றம்சாட்டும் பகுதியைப் படத்தில் காணலாம்.**

# அணுவாயுதத் திட்டத்தைக் கைவிட வடகொரியா நிபந்தனை விதிப்பு

(பியோங்யாங்)

அணுவாயுதத் திட்டத்தைக் கைவிட வடகொரியா நிபந்தனை விதித்துள்ளது. தமக்கு பொருளாதார உதவியும், அரசியல் அங்கீகாரமும் அளித்தால் மட்டுமே அமெரிக்கா கூறுவதற்கேற்ப அணு சக்தித் திட்டத்தை கைவிடுவது சாததி என்று அந்நாடு அறிவித்துள்ளது.

சீனாவில், அமெரிக்கா,வடகொரியா, தென்கொரியா ஆகிய நாடுகளிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே வடகொரியப் பிரதிநிதி இதனைத் தெரிவித்தார்.

ஆனால் பொருளாதார உதவி அல்லது எரிசக்தி தொடர்பான உதவிகள் வழங்குவதற்கு முன்பாக வடகொரியா தனது அணுவாயுத் திட்டங்களை நிபந்தனையின்றி முழுமையாக முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.

அதேவேளை அணுவாயுதத் தயாரிப்புக்கான திட்டங்கள் எதனையும் தாங்கள் மேற்கொண்டிருக்கவில்லை என்று வடகொரியா திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இந்தப் பிரச்சினை அமெரிக்காவுககும் வடகொரியாவுக்கும் இடையில் மிகப் பெரிய முட்டுக்கட்டையாக இருக்கும் என்று பெய்ஜிங் செய்திகள் கூறுகின்றன.

இரு தரப்பினரும் மீண்டும் சந்தித்துப பேச்சுவார்தததை நடத்த ஒப்புக் கொண்டிருப்பதும் தீர்வுக்கான வழிவகைகளை ஆராய இருதரப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதும் தற்போதைய பேச்சுவார்த்தைகளின் முக்கியமான முன்னேற்றம் என்று தென்கொரியப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

(து-2)

# பலஸ்தீனத்தின் 4 வங்கிகளை இஸ்ரேலியர்கள் மூடி சீல் வைப்பு

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தின் ரமழாப் பகுதியில் உள்ள 4 வங்கிகளை இஸ்ரேலயத்துருப்பினர் மூடி சீல் வைத்துள்ளனர்.

இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தும் அமைப்புக்கு இந்த வங்கிகள் மூலம்நிதி அனுப்பி வைக்கபடுவதாகக் குற்றம் சாட்டியே இந்த வங்கிகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

மூடப்பட்ட வங்கிகளுள் இரண்டு அரேபிய வங்கிகளும் அடங்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வங்கிகள் மூலம் 8 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட தொகை தீவிரவாதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலியப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையின் போது எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் மீது இஸ்ரேலியத்துருப்பினர் கண்ணீர்ப் புகைப்பிரயோகத்தையும் இறப்பர் தோட்டாப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இதனால் 42 பேர் காயமடைந்தனர் என்றும் இவர்களில் 5 பேரின் நிலை கவலைக்கிடமாவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(து-9)




# பிரபல திரைப்படத் தயாரிப்பாளர் நாகிரெட்டி காலமானார்

(சென்னை)

பிரபல தமிழ், தெலுங்குப் படத் தயாரிப்பாளரும் அம்புலிமாமா பத்திரிகை உரிமையாளருமான நாகிரெட்டி நேற்றுமுன்தினம் சென்னை மருத்துவ மனையொன்றில் காலமானார், அவருக்கு வயது 92.

மாஜாபஜார், மனிதன் மாறவில்லை, எங்க வீட்டுப் பிள்ளை, ஜுலி உட்பட 50க்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்குப் படங்களை அவர் தயாரித்துள்ளார்.

நாகி ரெட்டியின் மறைவு குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா அதிர்ச்சியும் ஆழ்ந்த வருத்தமும் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் நாகிரெட்டியின் மறைவால் ஒரு பெரும் திரைப்படத் தயாரிப்பாளரை, அரிய மனித நேயப் பண்பாளரை நாம் இழந்து விட்டோம் என்று கூறியுள்ளார்.

(து)

# பேச்சு மூலம் தீர்க்க முடியாத பிரச்சினையே இல்லை-வாஜ்பாய்

(புதுடில்லி)


நாட்டு மக்களின் நலவாழ்வை மேம்படுத்தவே அரசுவிரும்புகிறது, தறபொழுது நாடு வளர்ச்சிப் பாதையில் முக்கியமானதொரு திருப்பு முனையில் உள்ளது. இந்த நல்ல சூழலைப் பாதிக்கக் கூடிய எதையும் அனுமதிக்க வேண்டாம் என்று பிரதமா வாஜ்பாய் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

டிலலியில் பா.ஜ.க. சார்பில் நடைபெற்ற சிறுபான்மையினர் மாநாட்டில் பிரதமர் உரையாற்றினார்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியாத பிரச்சினையே கிடையாது என்ற பிரதமர், பாகிஸ்தானுடனான இந்தியாவின் உறவில் முன்னேற்றம் எட்டப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

அண்மையில் தான் பாகிஸ்தான் சென்றபோது அமைதி என்ற ஒன்றே தமது செய்தியாக இருந்தது; நண்பர்கள் மாறலாம் ஆனால் அண்டை நாடு என்பதில் மாற்றம் இருக்க (முடியாது. போரிட்டுத் தான் ஆக வேணடும் என்றால் அது வறுமையையும் ஏழ்மையையும் ஒழிப்பதறகான போராட்டமாக இருக்கட்டும். ஒருவரோடொருவர் மோத வேண்டாம் என்றார்.

அனைத்து அண்டை நாடுகளுடனும் இநதியா அமைதியுடன் வாழவே விரும்புகிறது; அதே நேரம் நாட்டின் நலன் கருத்தில் கொள்ளப்படும் என்றார் வாஜ்பாய். (து)



**ஹெயிட்டியின் தலைநகர் போட்ஸ் ஓ ஸ்மீத்தில் நடைபெறும் கலவரங்களில் எரிந்த நிலையில் காணப்படும் வாகனமொன்றைப் படத்தில் காண்கின்றீர்கள்.**

# அரசியல் யாப்பின் துணைகொண்டு சர்வாதிகாரம் நடத்துகிறார் சந்திரிகா

## சாடுகிறார் விரிவுரையாளர் எம்.எச்.கலீம்

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வாதிகாரப் போக்கில் செயற்படுவதற்கு இலங்கையில் உள்ள அரசியல் யாப்பபே முக்கிய காரணம்.**

**இதனால் அரசியல்யாப்புத் திருத்தப்படும்வரை எமது நாட்டில் சர்வாதிகார ஆட்சி தொடரும் என பல புத்தி ஜீவிகள் சுட்டிக் காட்டியுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். கொழும்பு பல்கலைக்கழக அரசியல் மற்றும் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச்.கலீம்.**

ஜனாதிபதி சர்வாதிகாரப் போககில் செயற்படுகின்றாரா? என்பது குறித்து ஊடகம் ஒன்றிற்கு விளக்கமளிககையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் இது பற்றிக் கூறுகையில்,

1978 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்ததன அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கியிருக்கின்றது.

இதனால் ஜனாதிபதி தனக்கு உரிய சகல அதிகாரங்களையும் வைத்துக் கொண்டு சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்.

### சிறுபான்மை மக்கள் பாதிக்கப்படுகின்றனர்

இதன் விளைவாக சிறுபான்மையின மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால் ஜனாதிபதி சர்வாதிகாரப் போக்குடையவர் என முத்திரை குத்தப்படுகின்றார்.

உண்மையிலேயே சர்வாதிகாரி என்று சொல்லப்படுகின்ற போது ஜனநாயக நாட்டிலே உள்ள ஆட்சியாளர் ஒருவர், அவர் ஜனாதிபதியாக இருந்தாலும் சரி பிரதமராக இருந்தாலும் சரி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மீறிச் செயற்படுகின்றார் ஆயின் அவரை சர்வாதிகாரி எனக் கூறலாம்.

ஆனால், எமது நாட்டில் ஜனாதிபதிக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றதுடன், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என இரு தரப்பு ஜனநாயக நாட்டில் இருக்கின்ற போது அங்கு அதிகாரம் மற்றும் பதவிப் போட்டிகள் ஏற்படுகின்றன. இதனால் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி தனது அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது.

### இன்னுமோர் பிரச்சினை

இதற்கிடையில் எமது நாட்டில் இன்னுமொரு பிரச்சினை இருக்கின்றது. அது என்ன வென்றால் பிரதமா ஆளுங்கட்சி சார்பாக செயற்படுகின்றார். ஜனாதிபதி எதிர்க்கட்சி சார்பாக செயற்படுகின்றார்.

இதனால் இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் வளர்ந்து கொளளும சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இது ஒரு புறமிருக்க பல்லின மக்கள் வாழும் இந்தியாவில் உள்ள அரசியல் யாப்பைப் பற்றி ஆராயந்து பார்க்கின்ற போது அங்கு பிரதமருக்கே அதகமான அதிகாரங்கள வழங்கப்பட்டிக்கின்றன. அதனை இன்னும் விளக்கமாகக் கூறுவதானால அரசாங்கம் என்ற கப்பலை வழி நடத்தும் மாலுமியாக பிரதமர் செயற்படுகின்றார்.

இவவாறு உலகில் ஒவ்வொரு நாடுகளிலும் ஒவ்வொருவிதமாக அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், இலங்கை அவ்வாறு புதிதாக அரசியல் யாப்பை உருவாக்கவில்லை. மேலத்தேய நாடுகளின் அரசியல் யாப்பை பின்பற்றிக் கொண்டிருக்கிறது.

### அடியொற்றிய அரசியல் யாப்பு

அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், பிரித்தானிய ஆகிய நாடுகளின் அரசயல் யாப்பு முறைகளை அடியொற்றி ஓர் கலப்பு முறையிலான அரசியல் யாப்பு உருவாக்கப் பட்டுளளது. இவ்வாறு கலப்பு முறையில் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பில் சகல அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதி நிர்வாக முறைமையை, முன்னாள ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அறிமுகப்படுததிய போது அதற்கான காரணங்களை (அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை) விளககமாகக் குறிட்பிட்டார்.

அதில் இலங்கை போன்ற பல இன மக்களைக் கொண்ட நாட்டில் தலைவராக வருபவர் சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் தேர்நதெடுக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் தான் நான் இத்தகைய ஜனாதிபதி நிர்வாக முறையை அறிமுகம் செய்திருக்கின்றேன் எனக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறான ஆட்சியாளர்கள் தெரிவுசெய்யப்படுகின்றபோது சகல இன மக்களினதும் அபிலாசைகளையும் அவர்கள் திருப்திப் படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால் துரதிஷ்டவசமாக இன்று இலங்கையில் அவ்வாறான தொரு நிலையைக் காணமுடியாதிருக்கின்றது.

### சிங்களவர் கூறுவதென்ன?

இதற்கு முக்கிய காரணம் இனப் பிரச்சினையென சிங்கள அரசியல வாதிகள் கூறுகின்றனர். அத்துடன், இந்த இனப்பிரச்சினை எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதற்கும் பலகாரணங்களைக் கூறி வருகின்றார்கள்.

சிலர் வரலாற்றுக்காரணங்களைக் கூறுகின்றாாகள். சிலர் பொருளாதாரக் காரணங்களைக் கூறுகின்றார்கள். சிலர் அரசியல் காரணங்களைக் கூறுகின்றார்கள்.

இதேவேளை, சிறுபான்மையினத்தவராகிய நாங்கள் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் பல்வேறு விதமான பிரச்சினைகளைக் காடடுகின்றோம். மொழிப் பிரச்சினை, பலகலைச் கழகங்களுக்கான அனுமதியில் இருந்து நீக்கப்பட்ட தரப்படுத்தல், காணிப் பகிர்வு, வேலை வாய்ப்பு எனப் பல பிரச்சினைகளை முன்வைக்கின்றோம்.

ஆனால், என்னைப் பொறுத்தவரையில் அடிப்படையில் ஏதோ ஒரு தவறு நடந்திருக்கின்றது. அந்தத்தவறு என்னவென்றால் வெள்ளையர்களிடம் இருந்து நாம் சுதந்திரம் பெற்றபோது அவர்களின் ஆட்சி முறையை நாம் அப்படியே ஏற்றுக் கொண்டுடிருப்பதே.

### ஆட்சி சிறக்க

உண்மையிலேயே ஆட்சிமுறை சிறப்பாக இருக்க வேண்டுமாக இருநதால் அந்த நாட்டிற்கு உரிய வரலாறு, அரசியல், பொருளாதாரம், கலாசாரம் போன்றவற்றை அடிப்டையாக வைத்து அரசியல் யாப்பு உருவாக்கப்படவேண்டும்.

ஆனால் நாம் சூரியன் அஸ்தமிக்காத ராம்ராஜ்சியம் என வாணிக்கப்பட்ட பிரித்தானியாவில் காணப்பட்ட ஆட்சிமுறையை எமது நாட்டில் பின்பற்றிக் கொண்டுள்ளோம்

இது எப்படி இருக்கின்றதென்றால் ஒரு சிறிய குழந்தை தவழ்ந்து எழுந்து நடக்க முறபடுகின்ற போது அந்தக் குழந்தைக்கு 30 வயது அல்லது 40 வயதுடைய மனிதனின் உடையை அணிவது போன்றது.

இதனால் எழுந்து நடக்க முறபடும் அந்தக்குழந்தை உடையின் சுமை தாங்க முடியாது மீண்டும் நிலத்தில் வீழ்ந்து தவழவும் முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றது.

இவ்வாறான நிலைமையைத் தான் மேற்கத்தேய ஆட்சி முறையை எமது நாட்டில் அறிமுகப்படுத்தியதன் மூலம் பெற்று இருக்கின்றோம். இதனை நாம் ஜனநாயகம் எனக் குறிப்பிடுகின்றோம்.

இத்தகைய ஜனநாயகம் தான் எமது நாட்டில் பெரும் குழப்பங்களையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

### ஜனநாயகம் என்றால் என்ன?

ஜனநாயகம் என்பதன பொருள் என்னவென்று பார்த்தால் பெருபான்மையின மக்கள் ஆட்சி செய்வதே.

இதேசமயம் இலங்கையில் சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் 1947 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி 1957 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகிய இரு தேசியக் கடசிகளும் ஆட்சி அமைப்பதற்காகப் போட்டியில் பங்கெடுத்துக்கொண்டன.

அத்துடன், இவ்விரு கட்சிகளும் பெரும்பான்மையின மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகப் போட்டியிட்டன.

பின்னர் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்ட இவ்விரு கட்சிகளும் பெரும்பான்மை இனமக்களுக்கு அதிக சலுகைகளையும் விசேட உரிமைகளையும் பெற்றுக்கொடுத்தன.

இதனால் சிறுபான்மையின மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதன் விளைவாகத்தான் இனப் பிரச்சினை தோன்றியது.

எனவே, என்னுடைய அடிப்டையான வாதம் என்னவென்றால், இலங்கை போன்ற நாடுகள் தங்களுக்கே உரிய தனித்துவமான முறையில் ஆட்சி முறைமைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

### முட்டுக்கட்டை

அத்துடன் இலங்கையும் மிக முக்கிய பிரச்சினையான இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் அரசியல் யாப்பை மாற்றி சகல இன மக்களினதும் நலன்களைப் பாதிக்காத வகையில் உருவாக்க வேண்டும்.

அதற்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்க வேண்டும்.

இதேவேளை, 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பினை அறிமுகப்படுத்திய அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அதனை வேறு எவரும் மாற்றி அமைக்கக் கூடாது என்ற நோக்கில் விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறையொன்றை அறிமுகம் செய்தார்.

இதனால் தான் 1982 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு செல்லாமல் பாராளுமன்றத்தில் அவர் பெற்றிருந்த 6 இல் 5 பெரும்பான்மையைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக மக்கள் தீர்ப்பு ஒன்றிற்கு சென்றிருந்தார்.

### பெரும் சிக்கல்

இதனால் இலங்கை அரசியல் யாப்பை மாற்றி அமைப்பதில பெரும் சிக்கல் ஏற்பட்டிருக்கின்றதையும் இங்கு ஏற்றுக்கொள்கின்றேன்.

ஆனாலும், சகல இன மக்களின ஒப்புதலுடனும் அவர்களின் ஆதரவுடனும் அரசியல் யாப்பை மாற்றிக் கொள்வது பற்றி அரசியல் கட்சிகள் மற்றும் நாட்டின் தலைவர்கள் ஆராய்ந்து அதனை எப்படியாவது புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவ்வாறு அரசியல் யாப்புப் புதுப்பிக்கப்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பட்சத்தில் நாட்டில் வாழும் சகல சிறுபான்மையின மக்களினதும் நலன்கள் பாதிககப்படாத வகையில் சமமான உரிமைகளை அந்தஸ்துக்களைக் குறைந்தபட்சம் அவர்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ற விதத்ததிலாவது பெற்று வாழக்கூடிய அமைமப்பினைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இதற்கிடையில் இலங்கையில் தற்போது உள்ள அரசியல் யாப்புத் திருத்தப்படும் போது அதுபற்றி மக்களுக்கு சரியான விளக்கத்தை வழங்கவேண்டும்.

### உரிமை பறிபோகிறது

ஏனெனில் எமது நாட்டில் உள்ள பல மக்களுக்கு தமது உரிமைகள் பறிபோகின்றமை பற்றிக் கூடத் தெரியாதிருக்கின்றனர்.

இதேசமயம் நாட்டில் சிறந்த ஆட்சியாளர்களைத் தெரிவுசெய்து சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடிய சந்தர்ப்பமாக எதிர்வரும் பொதுத் தேர்தல் அமையப்போகின்றது.

எனவே, சிறுபான்மையின மக்கள் இவ்விடயத்தில் மிகத் தெளிவாக சிந்தித்து நடந்து கொண்டால் சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகள் ஓரளவு தீர்க்கப்படும. முழுமையாக இல்லாவிட்டாலும் மககள் பேர் அச்சமில்லாது அமைதியாக வாழக்ககூடிய சூழ்நிலையே உருவாக்கப்படும் என்றார்.(ஊ-60,10)

---

# நூலகம் திறந்து விட்டமைக்கு ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

எமது வேண்டுகோளை ஏற்று யாழ்.பொது நூலகத்தை உடனடியாக வாசகர்களின் பாவனைக்கு திறந்துவிட நடவடிக்கை எடுத்தமைக்காக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம். இவ்வாறு ஈழ மக்கள ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்கிளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

அண்மையில் ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேசிய போது யாழ்.பொது நூலகத்தை இயன்றளவு விரைவாக வாசகர்களின் பாவனைக்குத் திறந்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரியிருந்தமை தெரிந்ததே. இதன் அடிப்படையில் இப்பொழுது நூலகம் சமீபத்தில் வாசகர்களின் பயன்பாட்டிற்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

ஆக்கபூர்வமான செயற்பாடுகளின் மலிவான அரசியல் விளம்பரம் பெறும் குறுகிய சுயலாப நோக்கங்கள் எதுவும் எமக்கு இல்லை. ஆதலால் அர்த்தமற்ற போட்டிகளைத் தவிர்த்து மக்களுக்குப் பயன்கிடைப்பதை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கக்கோரினோம். இதனால் இப்பொது நூலகம் இப்போது திறக்கப்பட்டுள்ளது. இதற்காக ஜனாதிபதிக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-4)

---

# சலன சித்திரம் அமைப்பு ஜே.வி.பி.யுடன் சந்திப்பு

(கொழும்பு)

"சலன சித்திரம்" அமைப்பின் சம்மேளனம் மற்றும் மாவட்ட நிர்வாகிகளுக்கும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களுக்குமிடையேயான சந்திப்பு நிகழ்வொன்று கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

திரைப்படக் கூட்டுத்தாபனத்தைத் தமிழிலும் இயக்குவது, பணிப்பாளர் சபை நியமனம் செய்வது, கலைஞர் நலவுரிமையை உறுதிப்படுத்துவது, ஆபாசத் திரைப்படங்களை தடைசெய்வது உட்பட இலங்கைத் தமிழ் சினிமாத் திரைப்படத்துறை வளர்ச்சிக்காக முன்னெடுக்கப்படவேண்டிய முக்கிய பல விடயங்கள் பற்றியும், நாட்டு நடப்பின் பொதுப் போக்குப் பற்றியும் இச் சந்திப்பில் கலந்து ரையாடப்படவுள்ளது.

க.தேவதாசன் தலைமையில் "சலன சித்திரம்" அமைப்பினரும், விமலவீரவன்ச தலைமையில் மக்கள் விடுதலை முன்னணியினரும் சந்திக்கும் இந்நிகழ்வில், யாழ்.மாவட்டத்திலிருந்தும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

---

# கண்பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

தீவக லயன்ஸ் கழகம் நடாத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

கண் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாஸன் பங்கேற்கும் இந்தக் கண் பரிசோதனை,முகாமில் கண் விழி வெண்படலப் பரிசோதனை, ஆலோசனை ஆகியன இடம்பெறவுள்ளன.

இதில வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, சரவணை, நாரந்தனை, ஊர்காவற்றுறை, சுருவில் ஆகிய பகுதி மக்களைப் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-4)

# தமிழர் தம் ஒற்றுமையை சீர்குலைக்க எண்ணும் பேரினவாதிகளுக்குப் பாடம் புகட்ட தேர்தலைப் பயன்படுத்த வேண்டும்

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ தேசிய கூட்டமைப்பு போட்டியிட்டு வெற்றி பெற்றால் அது தமிழீழ விடுதலைப்புலிகளுக்குக் கிடைத்த வெற்றியென்றே கருதவேண்டும்.**

**இந்தவிடயத்தை இந்தியா எற்கனவே அறிந்து கொண்டுள்ளதால்தான் தன்னைத்தான பலப்படுத்திக்கொள்வதில் மிக அக்கறையாக இருக்கின்றது என அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள அரசியல் அவதானிகள்,

தமிழ்தேசிய கூட்டமைப்பின் பின்னால் தமிழீழ விடுதலைப் புலிகள்இருக்கின்ற இந்த நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் ஆட்சியை நிர்ணயிக்கின்ற சக்தியாக விடுதலைப்புலிகள் வந்துவிடுவார்களே என்ற அச்சம் இந்தியாவுக்கு இருக்கிறது.

எப்படியாயினும் தமிழ் தரப்பு ஆட்சியை நிர்ணயிக்கும் சக்திகளாக வரககூடாது என்பதற்காக இந்தியா மிகவும்கவனமாக காய்களை நகர்ததி வருகின்றது.

இதனால் எதிவரும் பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமது முக்கிய இலக்குகளை கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் ஏகோபித்த ஒற்றுமையை வெளிக்காட்டுதல் வேண்டும். இது மிகவும் முக்கிய மானதாகக் கருதப்படுகின்றது. சர்வதேச சமூகம் இதனையே மிகவும் கூர்மையாக அவதானித்து வருகிறது.

இதற்கிடையில் தமிழ் தேசிய எதிாப்பு சக்திகள் தமிழ் மக்களின ஏகோபித்த ஒற்றுமையை வெளிப படுத்த விடாது தடுப்பதற்கு என்ன செய்யலாம்? என தலையைப் பித்துக்கொண்டிருக்கின்றன.

சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்களின் ஆயுத பலம் பற்றி மிகத் தெளிவாகக் கடந்த காலங்களில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில் தமிழ் மக்களின் அரசியல் பலம் எவ்வாறிருக்கும் என்பதை எடுத்துக்காட்டுவதற்கு எதிர்வரும் பொதுத் தேர்தல் நல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இதற்கிடையில்,தமிழ் மக்களின் அரசியல் பலத்தை சர்வதேச நாடுகளுக்கு அறிவிப்பதற்கு சில பேரினவாத சக்திகள் தடையாக செயறபடமுயலுகின்றன.

அதற்காகவே சில தமிழ் கட்சிகளை தங்கள் வசம் வைத்துக் கொண்டு அற்பசொற்ப சலுகைகளை வழங்கி தங்களின் அடிமைகளாக்கிவருகின்றன.

தமிழ் கட்சிகளை பிளவுபடுத்தினால் தமிழர்களின் ஒற்றுமையை சீர்குலைத்துவிடலாமென எணணும் பேரினவாத சக்திகளுக்கு நல்லதொரு பாடம் புகட்டும் காலமாக எதிர்வரும் பொதுத் தேர்தல் அமையுமென நாம் எதிர்பார்க்கிறோம்.

இது ஒருபுறம் இருக்க தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எதுவும் அறிந்திருக்காத சர்வதேச நாடுகள் எல்லாம் தற்போது தமிழ் மக்களுக்காக அனுதாபப்படுகின்ற நிலையை தமிழீழ விடுதலைப் புலிகளே ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்பதை நாங்கள் மறைக்க முடியாது.

விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி அவர்களுக்கெதிராக அரசு நடத்தி வந்த போராட்டத்திற்கு ஆயுதம் வழங்கிவந்த நாடுகள் எல்லாம் தறபோது சமாதானத்தை உருவாக்க வேண்டாமென அரசுக்கும் ஜனாதிபதிக்கும் வற்புறுத்திவருகின்றன.

இலங்கை அரசுக்கு ஆயுத உவிகள் வழங்கிவந்த இந்த நாடுகள் அபிவிருத்திக்கென நிதியுதவிகளை வாரி இறைக்கின்றன. இன்னும் வளக்கமாக சொல்லப்போனால சாவதேச நாடுகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தெளிவாக அறிந்திருககின்றன. இதனால் எப்படியாவது அவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமெனத் துடித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலமை தமிழீழ மக்களுக்கு கிடைத்த பெரும் வெற்றி என்றே கருதவேண்டும். இதேசமயம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யபபடவுள்ள அரசாங்கம் தமிழ் மககளின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்குமா?அல்லது மீணடும் தமிழ் மக்களுக்கு எதிராக போராட்டததை ஆரம்பிக்குமா என்பதுதான அடுத்த பிரச்சினை.

அவ்வாறு எதிர்காலத்தில் ஆட்சி அமைக்கவுள்ள அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத தீர்ககாது விட்டால் மக்கள் மட்ட அரசியல் போராட்டங்கள் இடம் பெறும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

பாராளுமன்றிற்குள்ளே ஒரு போராட்டமும் பாராளுமன்றத்திற்கு வெளியே பல போராட்டங்களும் நடைபெறும்.

ஆர்ப்பாட்டங்கள் கண்டனப் பேரணிகள், ஹர்தால்கள், பகிஸ்கரிப்புகள என்ற வடிவில் பாராளுமன்றத்திற்கு வெளியே நடைபெறப்போகும் போராட்டத்தின் போது தமிழ் மக்கள் படையினராலும் பொலிஸாரினாலும், தாக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்படுவார்கள்.

இதனால் தமிழ் மக்கள் மீண்டும் அரசுக்கு எதிராக ஆயுதப் போராடடததை நடத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் வெறறி பெறும் போது தனி ஆட்சி அமைக்கும் நிலை ஏற்படும். போராட்டம் தோல்வி கண்டால் இலங்கைத் தமிழன் என்ற சொல்லைப் பயன்படுத்த முடியாத நிலையும் ஏற்படலாம்.

இதற்கிடையில் தமிழ் மக்களின் போராட்ட காலத்தில் சர்வதேச நாடுகள் தலையிட்டு அவர்களின் பரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் சூழ்நிலையும் இங்கு உருவாகலாம். அவ்வாறு சர்வேதச நாடுகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் தலையிடுகிறபோது போராடிய மக்களுக்கு ஓர் அரை அந்தஸ்தும் அரை சர்வதேச அங்கீகாரமும் கிடைக்கும்என்றே நம்புகிறோம். இதே சமயம், பாராளுமன்றம் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் முக்கிய களமாக இருப்பதால்பாராளுமன்றத்தின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிடக் கூடாது .

தமிழ் தேசிய அரசியலின் ஒருமைபபாட்டினையும் அதன் நியாயக குரலையும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துக் கூறுகின்ற தளமாகப் பாராளுமன்றம் இருக்கும்.

அது மட்டுமன்றி தமிழ்த் தேசிய அரசியலின் எதிரிகள் பாராளுமன்றத்தைத் தளமாகப் பயன்படுத்தி தமிழ்த் தேசியத்தைப் பலவீனப் படுத்துவதைத் தடுக்கக் கூடயதாகவும் பாராளுமன்றம் இருககும்.

இதே சமயம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்படவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள். தம்மை நாடாளுமன்ற உறுபபினர்களாகக் கருதாது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்காக உழைக்கும் தேச பக்தனாக எண்ண வேண்டும்.

இந்த நிலைமையை ஏற்படுத்துவதறகாகவே இம்முறை பாரம்பரிய கட்சி உறுப்பினர்களை வேட்பாளர்களாகத் தெரிவு செய்யாது தமிழ்த் தேசியத்தில் உறுதியான பற்றுக் கொண்டவர்களும் அதற்காக அண்மைக்காலத்தில் தீவிரமாக உழைத்து வருகின்றவர்களுமான தேசபகதர்கள் வேட்பாளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

எந்தத் தமிழ்த் தேசிய எதிர்ப்பு சக்திகளுக்கும் விலை போகக் கூடிய வகையில் நான்காக மடிந்து போகக் கூடியவர்களாக இவர்கள் தெரியவில்லை.

தேசிய உணர்வும், அதற்காக உழைக்க வேண்டும் என்ற விருப்பும் உடையவர்களாக இவர்கள் கருதப்படுவதால் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆவலோடும் உறுதியோடும உழைப்பார்கள் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (உ-63,10)

# அரசியலில் ஸ்திரநிலை தோன்றுவதற்கு ஐ.ம.சு.மு. ஆட்சிப்பீடம் ஏற வேண்டும்

## அதன் தேசியப் பட்டியல் வேட்பாளர் கருத்து

(கொழும்பு)

அரச ஊடகங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைத் பக்கச் சார்பாக மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் வேட்பாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.எம்.சுஹைர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் கருத்து வெளியிட்டுள்ள சுஹைர்,

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச ஊடகங்கள் பக்க சார்பாகப் பயன்படுத்தப்படுவதாக ஐக்கியதேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ தொடர்புசாதனத்துறைக்குப் பொறுப்பான புதிய அமைச்சர் லஷ்மன் கதிர்காமரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் அரச ஊடகங்கள் பக்கசார்பாக நடுநிலையற்ற செய்திகளை ஒலிபரப்புவதாக ஹப்புக்கொடுவ சுட்டிக் காட்டியிருந்தார். இதுவே ஓர் மிகைப்படுத்தப்பட்ட கருத்தாகும்.

இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு சேறு பூசும் செயலாகும். அரச ஊடகங்கள் நடுநிலையாகச் செயற்படவேண்டும் என்பது தெளிவான ஓர் விடயம். எந்தவொரு விடயத்திலும் பக்க சார்பாகச் செயற்படக்கூடாது. இந்த நடுநிலை மிகவும் அவசியமானது எனினும், தனியார் ஊடகங்களும் நடுவு நிலைமையுடன் செயற்படவேண்டிய கடப்பாடுண்டு. இந்த நிலைமை அரசியல் யாப்பிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் யாப்பின் 104வது சரத்தின் 'பி' பிரிவின் 5ஆவது விதந்துரையின் 'ஏ' பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனியார்துறை ஊடகங்களாக அனைத்து ஊடகங்களும் நியாயமான ஒலிபரப்பை மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளன.

அரசியல் யாப்பின் 104ஆவது விதந்துரைக்கு அமைய தேர்தல் காலத்தில் தேர்தல் ஆணையாளருக்கும் மக்களின் கருத்துக்களுடன் தொடர்புடைய விடயங்களில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு முழுமையான அதிகாரங்கள் இருக்கின்றன. இதற்கமைய எந்தவொரு ஊடக நிறுவனத்திற்கும் அதாவது, ஊடக நிறுவனங்களை வழிநடத்துபவர்கள் அல்லது உரிமையாளர்கள் அல்லது பத்திரிகை வெளியீட்டாளர்கள் நீதியானதும், நியாயமானதுமான தேர்தலுக்காக இதில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

எனினும், 5வது சரத்தின் 'ஏ' உபபிரிவு அநேகமான சந்தர்ப்பங்களில் கருத்தில் கொள்ளப்படவில்லை என்பதைக் காணமுடிகிறது.

தேர்தல் ஆணையாளர் பெப்ரவரி 11ஆம் திகதி தனியார் ஊடகங்கள் உள்ளடங்கலாக தெளிவான வழிகாட்டல் ஒன்றை வெளியிட்டுள்ளார், எனினும் இதுவரை அரச ஊடகங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வழிகாட்டல்கள் முன்வைக்கப்படவில்லை. இதன் மூலம் பெப்ரவரி 11ஆம் திகதி வெளியிடப்பட்ட வழிகாட்டல் அனைவருக்கும் பொருந்தும்.

தனியார் ஊடகங்கள் அதன் உரிமையாளர்களுக்கே உரித்துடையவை எனினும், இதன் மூலம் தனியார் ஊடகங்கள் அரசியல் யாப்பிற்கு முரணாகச் செயற்பட முடியும் என்பதில் அர்த்தமில்லை. தனியார் ஊடகங்களின் உரிமையாளர்கள் தங்களது விருப்பு வெறுப்புகளுக்கு அமையச் செயற்பட முடியும். சட்டத்தை மீறும் வகையில் செயற்படமுடியும் என நினைக்கக்கூடாது.

அரச ஊடகங்களுக்கு எதிராக முறைப்பாடு ஒன்று உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பேச்சாளரும் மங்கள சமர வீர தெரிவித்த முறைப்பாடானது தனியார் ஊடகங்களுக்கு எதிரானதாகவுள்ளது. எம்.ரி.வி., சிரச ரி.வி. ஆகிய ஊடகங்கள் அடங்குகின்றன. இந்த முறைப் பாடானது தெளிவாக உள்ளது.

சில தனியார் ஊடகங்களின் உரிமையாளர்கள் ஐக்கியதேசியக் கட்சியின தலைமைத்துவத்துடன் வைததிருக்கும் தொடர்புகளை வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கையை எதிர் காலத்தில் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதாயின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறுவது இன்றியமையாதது. சமாதான நடவடிக்கையின் வெற்றிக்கு அரசியல் ஸ்திரநிலை முக்கியமானது என்பதால் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கு ஜனாதிபதியுடன் சுமுகமாகச் செயற்படக்கூடிய கட்சி ஆட்சிக்கு வரவேண்டும்.

இதனால், ஐக்கியதேசியக் கட்சியைவிட ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படக்கூடிய மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியே மிகவும் தகுதிவாய்ந்ததாக இருப்பதாக இவர் சுட்டிக் காட்டுகின்றார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப்பீடம் ஏறினால் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைப் போல அரசியல் ஸ்திரமற்ற நிலை இருககாது என்றுகூறியுள்ளார். (உ-121)

## பரிசளிப்பு விழா

(பொன்னாலை)

அராலி வள்ளயம்மை ஞாபகார்த்த வித்தியாசாலையில் பரிசளிப்புவிழாவும் நிறுவுனர் தினவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு வித்தியாலய அதிபர் செ.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் வே.சிவானந்தம் கலந்து கொள்ளவுள்ளார்.

நிறுவுனர் நினைவுரையை அராலி சரஸ்வதி வித்தியாலய அதிபர் மா.சோமசுந்தரம் நிகழ்த்தவுள்ளார். (யே-49)

## சிறுதொழில் உதவி

(கொழும்புத்துறை)

உலக வங்கியின் அனுசரணையில் சுயதொழிலை வளர்த்தெடுககும் நோக்கில் சேவாலங்கா அமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புத்துறை ஜே.61, ஜே.62, ஜே.63 ஆகிய கிராம அலுவலக பிரிவு மக்களுக்கிடையே கலந்துரையாடல் ஒன்றை நடாத்தினர்.

குறித்த பகுதி மக்கள் தும்புத் தொழில் சிறுபண்ணை, தையல் மற்றும் ஆடை வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடுகின்றதால் இவர்களுக்குக் கடனடிப்படையில் ரூபா 2ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் வரை வழங்குவதோடு வேறு இதர உதவிகளும் செய்து தருவதாக சேவாலங்கா அமைப்பினர் உறுதி கூறினர்.

இதன் அடிப்படையில் கொழும்புத்துறை பகுதியில் உள்ள வறிய குடும்பங்கள் பலவும் பயனடைவார்கள் என்றும்அடுத்த மாதமளவில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப் படவுள்ளதாகவும் கொழும்புத்துறை மாதர் சங்கம் தெரிவித்தது. (யே-51)

## உலக விளையாட்டு வலம்



**இலங்கையுடனான டெஸ்தொடருக்கு தெரிவானால் புதிய பந்துவீச்சு ஒன்றை அறிமுகமாக்க எண்ணியுள்ளேன். இதற்காக நான் நெடுநாட்களாகப் பயிற்சி செய்து வருகிறேன் என்கிறார் ஷேன்வோன். 107 டெஸ்ட் போட்டிகளில் 491 விக்கட்டுகளை இவர் கைப்பற்றியுள் ளார். 85 டெஸ்ட் போட்டிகளில் 485 விக்கட்களைக் கைப்பற்றிய முத்தையா முரளீதரனும் வோனும் உலகசாதனைக் காகப் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.**



றினோல்ற் அணியின் இத்தாலிய சாரதி யானோ ட்ரூளி எ.ப்1 இளவேனிற்காலப் போட்டிப் பயிற்சியில்....

### தாச்சிப் போட்டியில்

## யாழ்.பெண்கள் அணிக்கு அன்பரசி வெற்றிக் கிண்ணம்

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய விளையாட்டு விழாவில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான தாச்சிப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.அணி வெற்றிபெற்று, கப்டன் அன்பரசி வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. யாழ்.அணிக்கும் முல்லைத்தீவு அணிக்கும் இடையிலான இப்போட்டியில் யாழ்.அணி 2:0 என்ற கணக்கில் வென்றது.

யாழ்.அணிக்கும் கிளிநொச்சி அணிக்கும் இடையிலான ஆண்களுக்கான தாச்சிப் போட்டியில் கிளிநொச்சி அணி வென்றது. குறிப பட்ட நேர முடிவில் தலா 15 புள்ளிகளுடன் இரு அணிகளும் சமநிலையில் இருந்தன எனினும் மேலதிகமாக வழங்கப்பட்ட நேரத்தில் 3:2 என்ற புள்ளி அடிப்படையில் கிளிநொச்சி அணி வென்றது.

இதேவேளை நேற்று நடைபெற்ற பெண்களுக்கான கபடிப் போட்டியில் மட்டக்களப்பு அணியும் ஆண்களுக்கிடையிலான கபடிப் போட்டியில் வவுனியா அணியும் சம்பியனானது.

மட்டக்களப்பு, அம்பாறை அணிகளுக்கிடையில் நடைபெற்ற கிரிக்கெற் அரையிறுதிப்போட்டி யில் மட்டக்களப்பு அணி 3 விக்கெற்றுக்களால் வென்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய அம்பாறை அணி 26.3 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 86 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 19.1 ஓவர்கள் முடிவில் 7 விக்கெற் இழப்பிற்கு 87 ஓட்டங்களைப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மட்டக்களப்பு அணிக்கும் யாழ். அணிக்கும் இடையிலான இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

(ச-68)

# விளையாட்டு

## மேற்கிந்தியத் தீவுகளில் அதிரடியாக ஆடுவோம்

### வோகன்


இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் எதிராக நடைபெறவுள்ள கிரிக்கெற் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெறக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருப்பதாக இங்கிலாந்து கிரிக்கெற் அணியின் கப்டன் மைக்கல் வோகன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு கிரிக்கெற் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி அங்கு 4 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது.

வோகன் தொடர்ந்து இது பற்றித் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் மேற்கிந்திய தீவுகளிலுள்ள ஆடுகளங்களில் ஆரம்பத்தில் மிக மெதுவாக ஓட்டங்களைக் எடுத்ததாகவும் இம் முறை அதிரடியாக ஆடுவதன் மூலம் சாதகமான பலனை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேற்கிந்திய தீவுகள் அணியில் குறிப்பிடக்கூடிய பந்து வீச்சாளர் எவரும் இல்லை எனவும் பிறையன் லாராவின் துடுப்பாட்டம் குறித்து விசேட கவனம் செலுத்தவுள்ளதாகவும் வோகன் குறிப்பிட்டுள்ளார்.


(யே-121)




ஐஸ் ஹொக்கிப் போட்டியொன்றில் கனடாவின் மொன்றியல் வீரரும் ஒட்டாவா வீரரும் மோதிக் கொள்ளும் காட்சி.



மார்சிலே பகிரங்க டெனிஸ் போட்டியிலிருந்து முதல் சுற்றிலேயே வெளியேற்றப்பட்ட முன்னணி வீரர்



இங்கலாந்து நாட்டு வீரரும் றியல் மட்றிட் அணியின் நம்பிக்கை நட்சததிரமுமான டேவிட் பெக்காம்



பிறேஸில் ஓபன் போட்டியில் ஸ்பெயினின் ஒஸ்கார் ஹெர்னாண்ட்ஸ் பிறேஸிலின் கஸ்ரோவா கேட்டனின் பந்தைத் தடுத்தாடுகிறார்.

## 3வது போட்டியில் ஆஸி. அணி வெற்றி நான்காவது ஒருநாள் போட்டி இன்று

(கொழும்பு)

இலங்கை அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நேற்று முன்



80 ஓட்டங்களைப் பெற்ற மஹேல ஜெயவர்த்தனவின் துடுப்பெடுத்தாட்டம்

தினம் ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற 3வது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கெற்றுக்களால் வெற்றிபெற்றுள்ளது. இதன்படி அவுஸ்திரேலிய அணி 2:1 என்ற ரீதியில் முன்நிலை வகிக்கின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து தமது அணியைத் துடுப்பெடுத்தாட அழைத்தார். இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெற் இழப்பிற்கு 226 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் மஹேல ஜெயவர்த்தன 80 ஓட்டங்களையும், உப்புல் சந்தன 34 ஓட்டங்களையும், திலகரட்ண டில்சான் 30 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக ஜேஸன் கிலெஸ்பி 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 48.3 ஓவர்களில் 5 விக்கெற்றுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது..

இதில் றிக்கிபொண்டிங் 63 ஓட்டங்களையும், டேமியன் மார்ட்டின் 62 ஓட்டங்களையும், அன்ட்றூ சைமன்ஸ் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும், கிளாக் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்ப்பாக சமிந்த வாஸ் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். இப்போட்டியில் சிறப்பாட்டக்காரராக ஜேசன் கிலெஸ்பி தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது சர்வதேச ஒருநாள் போட்டி பிரேமதாஸ விளையாட்டரங்கில பகல், இரவுப் போட்டியாக இன்று நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியானது இலங்கையணிக்கு மிக முக்கியமான போட்டியாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறுமாயின் அவ்வணி ஒரு நாள் தொடரைக் கைப்பற்றி விடும். எனவே இப் போட்டியில் இலங்கை அணி வீரர்கள் சிறப்பாக விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (யே-121



தென்னாபிரிக்க அணியை வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் நியூஸிலாந்து அணியினர்.



முந்நாள் அதிபாரக் குத்துச் சண்டை வீரர் ஜோர்ஜ் போர்மன் தனது 55வது வயதில் மீண்டும் போட்டியிட வருவதாக வதந்திகள் வந்ததனையடுத்து 'எனது புன்னகையை சம்மதமாகப் பலர் நினைக்கிறார்கள் மற்றும்படி இதில் உண்மையில்லை' என்கிறார் போர்மன்.

### யாழ்.கரபந்தாட்ட அணியினர்

## வன்னியில் இருந்து குருநாகல் பயணம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றததினால் நடாத்தப்படும் தேசிய மட்ட கரபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகச் சென்ற யாழ்.மாவட்ட கரபந்தாட்ட ஆண்கள் அணியினர் நாளை சனிக்கிழமை வன்னியில் இருந்து குருநாகல் பயணமாகவுள்ளனர்.

தற்போது வன்னியில் நடைபெற்றுவரும் தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவில் கலந்து கொண்ட பின்னர் அங்கிருந்து நேரடியாக குருநாகல் பயணமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம் மாத நடுப்பகுதியில், வட-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அணிகளுக்கிடையில் வவுனியாவில் நடைபெற்ற மாகாணமட்ட கரபந்தாட்ட போட்டிகளில் வெற்றிபெற்றிருந்த யாழ். மாவட்ட கரபந்தாட்ட அணியினர் இளைஞர் சேவைகள் மன்ற தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகி யிருந்தனர்.

குருநாகலில் இடம் பெறும் இளைஞர் சேவைகள் மன்ற தேசிய மட்ட கரபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள யாழ். மாவட்ட அணி வீரர்களின் விபரம் வருமாறு.

இ.கேசவன், க.மகிந்தன், வ.செந்தூரன், வ.செல்வமகிந்தன், த.விநோஜன், செ.செல்வரதன், பொ.தர்மீகன், க.வேணுகோபன், சி.விஜயகுமார் மற்றும் இ.ராஜகாந்தன் ஆகியோர். (யே-68)

## சண்டிலிப்பாயில் கரபந்தாட்டம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தின் கரபந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிகள் யாவும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

(யே-21)

## இல்ல மெய்வன்மை போட்டி

யா/ நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு பாடசாலைக்கு அருகில் உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி செம்பொற்சோதி நாகலிங்கம் பிரதம விருந்தினராகவும் எஸ்.ரி.பத்மநாதன், எம்.பரமேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (யே-117)

* * *

(கோப்பாய்)

அச்சுவேலி இடைக்காடு மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை 1.00 மணிக்கு வித்தியாலய அதிபர் சி.சித்திரவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் எம்.சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-79)

* * *

(கந்தர்மடம்)

யாழ்.புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறன் ஆய்வு இன்று வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். (யே-112)

## மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் விளையாட்டுப் போட்டிகள் இம் மாதம் 21 ஆம் திகதி கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் இ.இராசதுரை பிரதமவிருந்தினராகவும் வலிகாமம் கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் அ.கிரி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் சண்முகநாதன் இல்லம் 489 புள்ளிகளுடன் முதலாம் இடத்தையும் செல்லையா இல்லம் 399 புள்ளிகளோடு இரண்டாம் இடத்தையும் நவரட்ணராஜா இல்லம் 395 புள்ளிகளோடு மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. (யே-37)

வெள்ளி முற்றம்

# வாழும் மொட்டு வாடியதோ ???

சராசரியான மாணவர்களைக் கொண்ட அந்த வகுப்பிலே மீனா வின் மேல் ஆசிரியையின் பார்வை வெறித்துக்கொண்டிருந்தது. சாசு வதமாகவே மீனா தன் இயலா மையை ஆசிரியை எப்படியும் ஒரு பொழுதில் உணர்ந்து கொள்வார் என்ற எண்ணக்கருவினை நெஞ்சில் சுமந்தபடி அந்த மீனா- அவளது ளோடு மீனா கடைசி வாங்கிலே போய் நிற்கிறாள்.

காரசாரமாகவே ஜானகி ஆசி ரியை பாடங்களை தொடர்கிறார். வகுப்பிலே பின்னுக்கு நின்று கொண்டிருக்கும் மீனாவின் உள ளத்தை உவமை சொல்ல எது வுமே முடியாத நிலை.

திருந்த மீனா தளர் வடைந்து சோர்ந்தே போய்விட்டாள். தின மும் பள்ளியிலே அவளது ஜானகி ஆசிரியின் பாடவேளைகளின் போது வகுப்பின் பின்னாலே எழுந்து நிற்பதும் ஓர் வழக்கமா கியே போய் விட்டது மீனாவிற்கு.

"ஏன் மீனா பள்ளிக்கூடம் போகே லையோ" அவளது அப்பா சில

அவளது நிலைமைகளை அறிந்து கொள்ளும்; உணர்ந்து கொள்ளும் நிலையிலே சிறுமாற்றங்கள் குளிரு கின்ற அவள் மேனியை முகர்ந்த படி மீனா மீனா என தலைகளை கோதியபடி அந்தப் பெற்ற மனம்.

அவளது ஈரமுலைகளை ஊட் டிய இந்த மூன்றாவது மகவிற்கு பாசநிலை இறுக பந்தநிலை வலக அம்மா என்ற குரல் மீனா

துருதுரு விழிகள் எதையெதை யோ கூறிக்கொண்டிருந்தாலும் ஆசிரியை ஜானகிக்கு மீனா மேல் கோபம் "பொத்" தென மீறி வர அடக்கமுடியாத ஆத்திரத்தின் வெளிப்பாடாய் கத்தினார். "வகுப் புக்கு ஒழுங்கா வாறதில்லை... ஆனா வராமல் நிக்கிறதுக்குரிய காரணங் களை ஒழுங்கா சொல்லத்தெரி யுது... ஏன் மீனா நேற்று வரேலை? வழமை போல ஏதாவது சாட்டு வைச்சிருப்பீர் சொல்லும்?"

ஆசிரியை ஜானகியின் வார்த் தைகள் கரும்பலகையில் எழுதிய வெண் கட்டி எழுத்துக்களைப் போலத் தெளிவாக விழுந்தன. அதன் அர்த்தங்கள் மீனா கூறு வது பொய் என்றும் அவற்றை மென்று விழுங்குவதிலுமே ஆழப் புதைந்து இருந்தன. மீனா எது வுமே பேசவில்லை. கேள்வி கேட் கும் தன் வகுப்பாசிரியருக்காக எழுந்து நின்றாள்.

"என்ன பிள்ளை கேட்கிற னெல்லே. செவிட்டுப் பாம்பை மாதி ரிப்பேசாமல் நிக்கிறீர். ஏன் நேற் றைக்கு வரேலை? மீண்டும் அதே வெண்கட்டி வார்த்தைகள் மீனா வை உறுக்கின. உச்சரிப்பின் ஸ்தாயி எல்லைகள் சற்று வேறு பட்டு வேறுபட்டு எதிரொலிக்க மீனா வின் மௌனங்கள் மட்டுமே ஸ்தம் பிதம்.

வகுப்பிலே பிள்ளைகளின் நிசப் தம் இப்போது மெல்ல கலையத் தொடங்குவது மீனாவால் உணர்ந் துகொள்ளப்படுகிறது. காலைப் பொழுது ஒன்றின் சில்வண்டுகளைப் போல பிள்ளைகள் தம்முள்ளே ரீங்கரிக்கிறார்கள். "இந்த மீனா மேல் அந்தளவிற்கென்ன ரீச்ச ருக்கு ஆத்திரம்" எனச் சிலரும் இவ "நெடுகவே பொய் சொல லுறா போல" எனப் பலருமாக அந் தப் பிஞ்சு உள்ளங்கள் பலவா றாகப் பேசிக்கொண்டன தம்முள். அந்தப் பேச்சுக்களை அவ்வளவாக ஊகித்துக் கொள்ள முடியவில் லை அந்த மீனாவால்.

ஒரு கணம் ஆசிரியரைப் நிமிர் ந்து பார்த்த மீனா... மீண்டும் ஆசி ரியை தொடங்கினார். "என்னைப் பற்றி உமக்கு நல்லாத் தெரியும். வாயைத் திறந்து நீர் உள்ளதைச் சொல்லாட்டில்..." இழுத்துக் கொண்டார்.

மீனா முந்திக்கொண்டாள். "ரீச்சர் உண்மையாகவே ரீச்சர் உடம்பு சரியில்லை... நெஞ்சுக் குள்ள ஒரே வலி... அவள் தொடர்ந்து சொல்வதற்குள் தன் மெல்ல வரும் உமிழ்நீரை விழுங்கும் இடைவெளிக்குள் "கொல்" லென்று ஒரு சிரிப்பு வந்தது. தான் இதே காரணத்தை இத்தோடு நான் காவது தடவை கூறுவது என்பதை மாணவர்களின் அந்தச் சிரிப்பு அவளிடம் பரிகசிப்பாக உணர்த்தி யது. இனியும் ஏதாவது கூற எடுத் தால் இதை விட பரிகசிப்பும் பல் லிளிப்புகளும் அதிகம் வரும் என உணர்ந்து கொண்ட மீனா அப் படியே கதிரையில் இருந்துவிட்டாள். அப்போதும் அவளுக்கு உடல நிலை சரியில்லாமல் இருந்தது என்பது உணரப்பட முடியாமல் அந்த உண்மைதான்.

வழமையாய் கூறும் அதே வராமையின் காரணத்தை கூறி விட்டு மீனா தன்பாட்டிலேயே இருந்து விட்டாளா என்பதும் ஆசி ரியைக்கு ஓர் உந்துதலைக் கொடுக்க அதுவே ஏச்சுக்களாய் புறப்பட்டன. "மீனா எழும்பும். இனி என்ரை வகுப்பில நீர் இருக்கவே கூடாது. பின்னுக்குப்போய் எழும் பியே நிற்க வேண்டும்"- இது ஆசி ரியை.

ஆளும்கட்சி பலமாக இருப்பது கண்டு தன் உண் மைகளை உரை வைக்க முடியவில்லையே என்ற வேதனை உள்வாங்கல்க

மீனா வீட்டிலே தனிப் பிள்ளை. அதாவது இடம் பெயர்ந்தோகை யில் ஷெல் பட்டு இறந்த அவளது அக்கா; காணாமல் போனோர் பட்டி யலில் நுழைந்த அவளது அண்ணா- சகோதர இழப்புக்களின் இடை நடு விலே எஞ்சியவள் தான் இந்த மீனா.

தாய் இரத்த அழுத்தம் உடைய ஓர் நோயாளி. தந்தை சற்று வயது தள்ளிப் போனாலும் ஏதோ தன்

வேளைகளில் கேட்பார். "சரியாக நெஞ்சு வலிக்குது அப்பா" இது மீனாவின் பதில்... அதற்குமேல் கதைகள் தொடராது. அம்மா கூறு வாள். "அந்தப் பெட்டிக்குள்ள பன டோல் வைச்சன். எடுத்துப் போடு பிள்ளை நெடுகக் குத்துது குத்து எண்டு சொல்லுறாய். டொக்ரிட்டை கொண்டு போய் காட்டவேணும்" இது அந்த உரைகளின் முடிவு

வின் உதடுகளில்...அந்தத் தொனி மீண்டும் புதிர் கொடுத்தது. அம்மா விற்கு பரமானந்தம் பிள்ளை மயங் கிட்டது... எனக்கெண்டால் பயமா யிருக்கு அம்மா கதறினாள். அது ஒண்டுமேயில்லை கொண்டு போன தும் ஒண்டு குளுக்கோஸ் ஏத்த எல் லாம் சரி வரும். பரமானந்தம் சமா தானப்படுத்தினான். வைத்திய சாலையும் நெருங்கிவிட...அங்கு பணிபுரிவோர் மீனாவை துரிதமாக அத் தள்ளு வண்டியிலே வைத்தி யரிடம் அழைத்துச் செல்ல...சில நிமிடங்கள் வரை அம்மா பதறிய





னாலாகும் வரை தன் வீட்டிற்காக பாடுபட்டு உழைத்துக்கொண்டி ருக்கும் ஓர் சராசரி மனிதன். வீட் டிலே மீனாவுக்கு வேலைப்பளு வும், அதிகமாகவே தான் இருந் தது. எனினும் மீனாவின் தாயார் அவளது படிப்பிலே கண்ணும் கருத துமாய்த்தானிருந்தாள். இழந்த தன் பிள்ளைகளை எண்ணுகின்ற போதிலெல்லாம் தாய் மோசமான நோயாளி ஆகிடுவாள். வறுமை யின் கொடுமையினால் ஈடு செய்ய முடியாத பேரிழப்புகளை சமதானப்படுத்த முடியாத நிலை யில் தந்தை.

காலையிலே எழுவது, வீட்டி னைக் கூட்டிப்பெருக்குவது, சமை யலுக்குத் தேவையான ஆயத்தங் களை செய்து கொடுப்பது, துணி களை துவைப்பது இவை மீனாவின் தவறாத கடமைகளாயின. இதை விட உரிமைகள் எனப் பலவும் பிறப்பெடுத்துக் கொண்டதனால் கடமைகளையும் உரிமைகளை யும் சரிவரச் செய்யும் மீனாவிற்கு உடல் நிலையிலும் கூட சிறு உபாதை இருந்து கொண்டு தான் இருந்தது. அடிக்கடி அவளை அறி யாமலே சோர்ந்து விடுவாள். இத னால் இடைக்கிடை வகுப்புகளுக் கும் போகாமல் நிற்பதும் ஓர் வழ மையாகிவிட்டது.

சாதாரணமாக நெஞ்சிலே ஓர் படபடப்பையே உணர்ந்து கொண்ட மீனா வறுமையின் பிடி யிலே சிக்கியது மட்டுமன்றி நிராத ரவான நிலையிலே அகப்பட்டதும் அவளது நாடித்துடிப்பின் துயர் களை தீவிரமாக்கிக் கொண்டது. இழந்த மகள் கிடைக்கமாட்டாளா என்றும் தொலைந்த மகன் திரும்பி வரமாட்டானா என்றும் ஏங்கியி ருக்கும் தாயிடம் எந்த ஆறுதலை யும் பெற முடியவில்லை மீனா வால்.

சிறு சிறு நட்பாய் இருந்து கொண்ட பள்ளி மாணவர்களும் இந்த ஆசிரியையின் குறி தவறும் இலக்குப் பார்வைகளால் நட் பினை கைகழுவி விட்டு விட்ட நிலைக்கு இட்டுச் சென்றது. வறு மையும் ஓர் காலாக இருக்கும் என் பது ஓர் புறம்.

ஓரளவில் படிப்பிலே ஒளிர்ந் ரையாக அமைந்து விடும்.

வகுப்பிலே எல்லோரது அரட்டை மொழிகளையும் கேட்கும் மீனா ஓர் மௌன மொழியாகவே திகழ்ந் தாள். எனக்கு இருபது உனக்கு பதினெட்டு படக்கதையை அபி ராமி சொல்லிக் கொண்டிருக்க வகுப் பிலே எல்லோரும் கூடியிருந்து கேட்கும் சிம்றனின் உடலழகை யும் சினேகாவின் புன்னகையை யும் தனுஷின் ஆட்டத்தின் வேகத் தையும் மதிப்பீடு செய்து கொண் டிருக்கும் அவளது வகுப்புறச் சக பாடிகளையே தனக்குள் ஆய்வு செய்து கொள்ளும் மீனாவுக்கு சுமார் இருமாத காலமாகப் பழக் கப்பட்டுவிட்டது.

பவானியைத் தந்தையார் காரில் கொண்டுவந்து 'ட்ரொம்' பண்ணி விடுவதும் சுமதியும் சிறுதுயும் ஸ்கூட்டரிலே வருவதும் தாரணிக்கு அவளது போய் பிரண்ட் "செல் போனிலே" செய்தி அனுப்புவதும் மீனாவிற்கு ஓர் கண்காட்சியும் விற் பனை விளம்பரமுமாகவே பா வைக்கப்பட்டது. ஆனால் அது பாதிப் பையும் ஏற்படுத்தியதா என்பது உணரப்பட முடியாமலிருந்த உண் மையேயாகும்.

கால நகர்வில் ஓர் நாள மீனா வின் வழமையான வேலைகள் சிறு சோர்வாகின. அந்தக் காலை வேளை அவளுக்கு ஓர் அகால வேளையாகவே புலப்பட்டது. நெஞ் சிலே 'சுளி' என்று ஓர் வலி சுளுக் கென்று ஏற்படவே "அம்மா" என்று அலறினாள். அதே குரல்...அதே தொனி....மீனாவின் அக்கா ஷெல் பட்டுக் கதறிய போதும் இப்படித் தான் கேட்டது அம்மாவிற்கு. எது வுமே செய்ய முடியாதவளாய் அம்மா பக்கத்து வீட்டுப் பரமானந் தம் அங்கிளை உதவிக்கு அழைத் தாள். மீனா சோர்வாகிப் படுத்தே விட்டாள். அவளது சோர்வு நிலை யைதையே உணர்த்திக் கொண்டிருக்க அயலவரின் உத வியால் அழைத்து வரப்பட்ட காரிலே மீனாவை ஏற்றியபடி அம் மாவும் கூட நின்றோருமாக அர சினர் வைத்தியசாலைக்கு விரை கின்றனர்.

மீனாவைத் தாங்கிய வண்ணம் இருந்த அம்மாவின் கைகளுக்கு

படியே அந்த வாங்குகளிலே குந் திக்கொண்டாள்.

ஆறுதலாகவே வெளியே வந்த தாதி "அம்மா டாக்டருடன் கதை யுங்கோ" அவர்களது செயல்கள் எல்லாம் மிக ஆறுதலாகவே நடைபெற்றுக் கொண்டிருந்ததால் எதுவுமே இல்லைப்போலும் என்ற உணர்வைப் பெற்ற அம்மாவிடம் வைத்தியர் தொடர்ந்தார். நீங்கள் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு வரப் பிந்திட்டது வழியிலேயே பிள்ளை மோசம் போயிட்டா....

வைத்தியரைத் தொடர விடா மல் "மீனா" என்ற அம்மாவின் ஓலம் வைத்தியசாலையை அதிர வைத்தது... சேயிழந்த தாயல்ல அவள்... சேய்களை இழந்த பாவி யான பேதை. தான் உயிருடன் இருப் பதற்கு அருகதையற்றவள் என்று குமுறிக் கலங்கி கதறும் அம் மாவை சமாதானப்படுத்த ஒருவரா லுமே முடியவில்லை.

மீனாவின் வீடு... திருமண பந் தத்திலே அவளைப் பார்க்க ஆவ லாய் இருந்த அதே வீடு... சகுனங் கள் மாறி மரண ஓலங்கள் சங் கோசிக்க பறையொலிமுழங்க அம் மாவின் அந்தக் குமுறும் ஒலி எல் லாவற்றிற்கும் மேலாக அதிர வைத்து கலங்கிக்கொண்டிருக் கின்றது. அவ்வேளை மீனாவின் வகுப்பு மாணவர்களை ஜானகி ஆசிரியர் அழைத்தபடி வருகிறார். வீட ஓலமிட வந்திருப்போர் கதறியழுத பாவியாகிப்போய்விட்ட அம்மா பார்த்து குமுறிய பாவம் அந்த மீனா நீட்டி நிமிர்ந்து படுத் திருக்கிறாள். தலைப்பாகத்தில் மங்கள சுந்தரமாகவே ஒளிரும் குத்து விளக்கொளி.

வட்டமாய்ப் பிள்ளைகள் வந்து நின்று தேவாரம் பாடுகின்றனர். ஒருநாளேனும் அவளை திருப்திப் படுத்தாத அவர் பாடுகின்ற பாமா லை மீனாவின் காதுகளில் கேட்டி டுமா? ஒருநாளாவது அன்பாய்ப் பார்த்து சிரித்தறியா ஜானகி ரீச்சர் ஒளியிழந்து சோபை ஒடிந்து சய னித்திருக்கும் மீனாவையே பார்த் தபடி நிற்கிறார்.

'ஏன் நேற்று வரவில்லை என்று அவர் கேட்பது போலவும் அதற்கு மீனா 'ரீச்சர் உண்மையாகவே

ஜெகசுபதா

நெஞ்சு வலியென்று கூறுவதுபோலு முள்ளது ஜானகிக்கு. அவரது கண்கள் காவிரியானது... தாயிடம் மெல்ல நகர்கிறாள். 'ஐயோ ரீச்சர் என்ரை பிள்ளைக்கு இதயத்தில ஏதோ வால்வு அடைச்சிட்டுதாம்... என்ரை பிள்ளை... நெடுக நெஞ்சு வலி எண்டு துடிக்கிறவள்..." கதறி னாள் அம்மா ஜானகியைக் கட்டிப் பிடித்தபடி.

சுருக்கிட்டது ஜானகி ரீச் சருக்கு... அங்கே கண்ணீர் அஞ்சலிகள் கைகளை நிரப்புகின்றன...என்ன அஞ்சலித்து என்ன பயனினி? ★

# ஒலுவில் துறைமுக அபிவிருத்திக்கு முட்டுக்கட்டை போடும் ஜனாதிபதி

(கொழும்பு)

கடந்த 17 ஆம் திகதி அமைச் சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஒலுவில் துறை முக அபிவிருத்திக்கு ரூபா 555.8 மில்லியன் செலவில் நிலம் வாங்குவ தென்ற தீர்மானத்தை உறுதி செய்ய வேண்டாம் என்று ஜனாதி பதி குமாரதுங்க அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.

அரச மதிப்பீட்டாளரினால் அந்த நிலத்தின் பெறுமதி இன்னமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை என்று ஜனாதிபதி அலுவலக செய் திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அமைச்சரவை அங்கீகரிப்பதற்கு முன்னரே சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு இது தொடர்பாக அறி விக்கப்பட்டிருந்ததை தான் அறிந் திருப்பதாக தெரிவித்திருக்கும் ஜனாதிபதி, இந்த நிலத்தை கொள் வனவு செய்யும் வேலையில் துரி தப்படுத்துவதே இதன் நோக்கமா கும் என்றும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அம்பாறை மாவட்டத் தில் போட்டியிடும் சூழ்நிலையில் இந் நிலம் தொடர்பான கொடுக் கல் வாங்கல் முறையற்றது என் றும் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிலம் கொள்வனவு தொடர்பான அமைச்சரவைப் பத் திரம் அமைச்சரவைக் கூட்டம் நடை பெற்ற வேளையிலேயே சம்பந்தப் பட்ட அமைச்சரினால் சமர்ப்பிக் கப்பட்டிருந்தது.

ஆனால், அது நிகழ்ச்சி நிரலில் அன்றைய தினம் சேர்க்கப்பட்டி ருக்கவில்லை. அவ்விவகாரம் ஒரு அவசரத் தீர்மானமாகவே முன் வைக்கப்பட்டிருந்தது. 50 பக்கங் கள் கொண்ட இந்தப் பத்திரத் தைப் படிக்க அவகாசம் அளிக்கப் பட்டிருக்கவில்லை.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட் டத்தில் இதனை முடிவு செய்ய வேண்டாம் என ஜனாதிபதி அறி விததிருந்தார்.

(உ-6)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி முன்பள்ளி ஆசிரி யர்கள் மற்றும் சுகாதாரத் தொண் டர்களுக்கான அவசர கலந்துரை யாடல் ஒன்று நாளை சனிக்கி ழமை காலை 9.00மணிக்கு நெல் லியடி மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. (உ-4)

# கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வருஷப்புலம் மக மாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 4,5,6 ஆம்திகதி களில் முறையே ஆலயத்தின் சப்பர, தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. (உ)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 3. தேசவழமையும்

58

## புத்தளம், கற்பிட்டித் தமிழர் வழமைகளும்

1815 ஆம் வருஷம் மாசி மாதம் 6ஆம் திகதியிலே எழுதிய கட்டளையும் தமிழ்த் தேச வழமைப் பொத்தகமுமாய் இதிற் கிடைத்து வாசித்துக்கொண்டடேன். ஆண்டவரை ஒரு முறை மண்டாடுகிறேன். எறப்போதரது எழுதுகிறதற்கு உத்தரவு கிடைக்க(வேணும்)

### முதலாம் அற்த்திக்கல் தேசவழமை இவ்விடத்திற்கு அடுத்தபகுதி

தமிழராய் இருக்கப்பட்டவர்கள் இவ்விடத்திலே வந்து தமிழிச்சியுடனே கலியாணம் பண்ணியிருந்து பிள்ளையில்லாதே செத்துவிட்டார்களேயானால் அப்படிச் செத்தவனுடைய உறவு முறையார் உரிமைபெறலாம். அவன் கலியாணம் பண்ணின நாளையில் தேட்டத்திலொன்று பாதியும் நீதிப்படி அவர்களுக்குடையது.

மற்றும் முதலாம் பகுதியிற் சொல்லியிருக்கிற வழமைகள் இவ்விடத்திற்குத்தேவையில்லை.

### இரண்டாம் அற்த்திக்கல் காணி பூமி, தோட்டம் முதலானதுகள் ஆட்சிப்படுகிற விதங்கள். இவ்விடத்து வழமைக்கடுத்த பகுதி

இரண்டுபேரென்கிலும் மூன்றுபேரென்கிலும் ஒரு காணியைப் பங்கு பிரியாமற் பொதுவிலே ஆண்டு வந்தவர்களானால், இதில் ஒருதன் அந்தக் காணியிலே தன்னுடைய பங்குப்பிரிவுக்குச் சற்றுக் குறைக்காண ஒருபுறமாக அடைத்துச் செய்கை பண்ணிக் கிணறும் வெட்டுவித்து தென்னங்கன்றுகளும் மற்றும் புரோசனமரம் முதலானபயிர்களும் செய்ததேயுண்டானால், மற்றப்பங்காளர் தங்கள் பங்குகளிலே யாதொரு செய்கை செலவு பண்ணாமல் அந்தப் பங்காளன் செய்த செய்கையின் பேரால் இன்பமான புரோசனங் காணும் அளவாகப் பார்த்திருந்து அவேட்சைத்தனமாகவென்கிலும் அந்தப்பங்காளனைத் துன்பப்படுத்தி அலக்களிவு பண்ண வென்கிலும் புரட்டுப்பண்ணுவார்கள். அப்படியே அநேகம் இந்தத் தேசத்திலே சிறிது பேர்களுக்குள்ளாக இவ்விடத்திலே கண்டிருக்கிறோம்.

அல்லாமலும், அறிவின்மையாலும் ஏழைத்தனத்தாலும் தங்கள் ஒழுங்கான வழமைகளைக் கூர்ந்து விசாரியாமல், அந்தப்புரோசனத்திலே தங்களுக்குப் பங்கு கிடைக்கவேணும் என்று முறைப்பாடு செல்லி வழக்குச்சொல்லுவார்கள். இந்த விதமான தெண்டிப்பின் பேரால் வரப்பட்ட புரோசனம் அந்தத் தெண்டித்தவனுக்குக் கிடைக்க வேண்டியது. ஆனால் தாங்கள் நினைத்த படிக்கு அந்தப் புரோசனத்திலே ஒன்றும் கிடைத்ததில்லை என்று அவன் மற்றதின் பேரிலே தங்கள் தலைப்புக்காண்பிக்கிறதற்கு அந்தக் காணியிலே அவரவருக்குச் சொந்தப்பங்கு தலைப்புக் காண்பிக்கிறதற்கு அந்தக் காணியிலே அவரவருக்குச் சொந்தப்பங்கு இன்னதென்று காணும்படிக்குத் தங்களுக்குண்டான பங்கு வீதம் பிரித்துத்தர வேணும் என்று கேட்பார்கள். இது காரியம் கூடாதென்று சொலப்படாது. ஆனால் இதிலே ஒரு காரியம் பேணிக்கொள்ளவேண்டியது.

அது எப்படி என்றால் அந்தச் செய்கை பண்ணினவனுடைய செய்கை அவன் பங்குக்குள்ளே சேரும். சேரும்படிக்கு மற்றப்பங்காளருக்குச் செய்கை பண்ணாத நிலங்களிலே பிரிவு காணும் படிக்கு வகைதேடவேணும்.

அப்படியே இந்தக்காணி பிரிவு பண்ணாமல் விட்டு வைத்து மற்றப் பங்காளரும் ஒவ்வொரு புறம் பிடித்துச் செய்கை பண்ணிப் பயிர் மரங்களும் வைத்து உண்டாக்கிப் புரோசனப்பட வருகிற காலத்திலே பங்கு பிரிக்க வேணும் என்று கண்டால் அப்போது காணி முழுவதும் அவரவர் செய்கை பண்ணின இடத்தைக் குறியாமற் பங்கு பிரிக்க வேண்டியது.

யாதாமொருத்தர் தென்னம்பிள்ளை வைத்து உண்டாக்குகிறதற்குக் காணி, பூமி இல்லாத பேர்கள் மறுபேர்களிடமாய் காணி வாங்கிச் செய்கைப்படுத்தி வைத்து உண்டாக்கினதே உண்டானாற் புரோசனம் பெறுகிற காலத்திலே அந்தச் செய்கை பண்ணித் தெண்டித்தவன் நாற்றுத்தேங்காய் செலவாக வைத்து உண்டாக்கினதே உண்டானால் காணி உடையவனுக்கே ஒரு பங்கும் தெண்டித்தவனுக்கு இரண்டு பங்கும் புரோசனம் எடுத்துக்கொள்ளுகிறது.

மற்றும் இரண்டாம் பகுதியிற் சொல்லியிருக்கிற வழமை இவ்விடத்திற்குத் தேவையில்லை.

### மூன்றாம் அற்த்திக்கல் நன்கொடை வகை

நன்கொடை வகை மூன்றாம் பகுதியில் இருக்கிறது. யாதொன்றும் இவ்விடத்திற் குத்தேவையில்லை.

### நாலாம் அற்த்திக்கல் காணி ஒற்றிவகை இவ்விடத்து வழமைக்கு அடுத்த பகுதி

யாதாமொருத்தர் ஒருதர் இடமாக ஒரு காணி என்கிலும் தோட்டம் என்கிலும் ஒற்றியாக வைத்து அந்தக்காணியிலே புரோசனம் வட்டிக்குச் சரியாக அனுபவிக்கும் படிக்குப் பொருந்திச் சில பணங்கள் வாங்கியிருந்ததே உண்டானால் அந்த விதமான காணிகள் அவர்கள் வேணும் என்ற நேரத்திலே மீளவும்படாது. அப்படியே மீள வேணும்என்று கண்டால், அந்தககாணியில் விளைவுகள் வாங்கியிருந்ததேயுண்டானால் மிகுதி அடங்கின உடன் காலத்திலே அந்த ஒற்றி ஆளுகிறவனுக்கு அந்தக்காணியிலே தெண்டித்துச் செலவளித்துச் செய்கை பண்ணவேண்டும் என்று அறியப்பண்ணி வைத்து அந்தக்காணியின் பேரால் வாங்கியிருந்த பணம் வரகு புலத்திற்கென்கில் ஆடி, ஆவணியிலும் நெல் வயலுக்கென்கில் ஆவணி, புரட்டாதியிலும் குறைவராமல் அந்த ஒற்றி ஆளுகிறவன் இடமாகக் கொடுத்துவிடவேண்டும். ஆனால் அந்த ஒற்றி ஆளுகிறவன் நல்ல வெள்ளாண்மை கிடைக்கும் என்றதைக் குறித்து அந்தக்காணியை ஒரு வருஷம் விளையாமற் குறை பசளை விட்டிருக்கிற சமயங்களிலே அப்போது ஒற்றி மீளுகிறவன் அந்த வருஷத்துக் கார்த்திகை மாதத்திலே பணம் கொடுத்துவிடவும் கடனாளியாய் இருக்கிறான்.

இதுவன்றியும் பனை மரம், கொழுந்து, புகையிலை இந்தவிதப்பட்ட தோட்டங்களும் சொல்லப்பட்ட கார்த்திகை மாதத்திலே ஒற்றி மீளவும் வேண்டியது. ஆனாற் காணி ஒற்றி கொண்டவன் தான் ஒற்றி பிடித்த காணியென்கிலும் தோட்டமென்கிலும் அதின் பெயராற் கொடுத்த ஒற்றி முதலுக்கும் வட்டிக்குத்தக்க புரோசனம் காணவில்லை என்று மனசு பேதலித்து அதிலே களன்று விடும் படிக்குத் தாம் கொடுத்த ஒற்றி முதலும் மறுபடியும் வேணும் என்று கண்டால், தான் ஒற்றி பிடித்திருக்கிற காணியென்கிலும் தோட்டம் என்கிலும் அந்த உடையவன் இடமாக ஒப்புக்கொடுத்ததின் பிறகு தன்னுடைய முதலுக்கு ஒரு வருஷம் பொறுத்திருக்க வேணும். ஆனால் ஒற்றி வைத்தவன் அந்த முதல் கொடுத்துக்காணி மீளுகிறதற்குத் தகுதியில்லாதே விட்டிருந்தானேயாகில் தன்னுடைய உரிமைக்காரரரை அந்தக் காணி அறுதி கொள்ளச் சொல்லிக்கேட்பான். இவர்களும் அந்தக் காணி ஒற்றி வைத்திருக்கிறது முதலுக்கு அதிகம் பெற்றதனாற் கொள்ளுவார்கள். அல்லது, முன் ஒற்றி கொண்டவன் தானே தான் கொடுத்திருந்த முதலுக்கு திட்டமான உடையவனாம். படியே அறுதி நறுக்கு எழுதி விற்றுக்கொண்டு உறுதிப்படுத்தும் பொருத்தத்துடனே பிடித்துக்கொள்ளவேணும். (தொடரும்)

# செய்தித் துளிகள்

### பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழக பொதுப் பட்டமளிபபு விழா எதிர்வரும் மார்ச மாதம் 20 ஆம் திகதி கல்லடி சுவாமி விபுலானந்தா இசை நடனக் கல்லூரியில் உள்ள இராசதுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவில் 2000, 2001 ஆம் கல்வி ஆண்டில் பொது அல்லது சிறப்புப் பட்டப்பரீட்சைகளில் சித்தியடைந்தோாகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (உ-10)

### தமிழ் மொழி இலக்கியச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட தரம்-8 இல் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கான "தமிழ் மொழியும் இலக்கியமும்" பாடத்திற்கான செயலமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் மொழியின் ஆக்கத்திறன் விருத்தி தொடர்பாக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளதால் சமபந்தப்பட்ட சகலபாடசாலைகளிலும் உள்ள தமிழ்ப் பாடம் போதிக்கும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் தவறாது இதற்குச் சமுகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

அத்துடன் இச் செயலமர்விற்கு வருகை தரவுள்ள ஆசிரியர்கள், மாணவர்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்டதென விதந்துரைககப் பட்ட சிறுகதை, கட்டுரை ஆகியவற் றின் பிரதியாக்கங்களையும் சஞ்சிகைகளையும் கொண்டு வருமாறும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ஆசிரியர்களைக் கேட்டுள்ளார். (உ-3)

### கூட்டம்

மானிப்பாய் பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சமாசத தலைவர் ஜே. ஜோன்சி ங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில், கியூடெக் நிறுவனப் பணிப்பாளர் சிறப்புரையாற்றவுளளார். (உ-95)

### பாவனைக்குதவாத உணவுப் பண்டங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் பிரதம பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜீவநாதன் தலைமையில் கடந்த 16 ஆம்திகதியன்று சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகா குழு, யாழ். நகரில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது விற்பனைக்காக வைக்கப்படிருந்த காலாவதியாகிய, மனிதப் பாவனைக்குதவாத 200 அப்பள் பழங்கள், 70 தோடம்பழங்கள், 100 கிலோ சர்க்கரை மற்றும் சிறிய அளவிலான திண் பண்டங்கள் ஆகியவற்றைகைப் பற்றி உரிமையாளர்களின் ஒப்புதலுடன் அழித்தொழித்துள்ளது. (உ)

### புதிய கட்டடம் நிர்மாணம்

(பொன்னாலை)

அராலி மேற்கு சமாதானக் கோட்டை திருச்சபை வளாகத்தில பல இலட்சம் ரூபா பெறுமதியில் புதிய எண்கோண மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. தென்னிந்தியத் திருச்சபை யாழ். அத்தியட்சகர் ஆதீனம் இதற்கான நிதி உதவியினை வழங்கியுள்ளது.இக்கட்டடத்தில் கணனிநிலையம், நூல் நிலையம் என்பன இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வளா கத்தில் ஏலவே இருந்த பழைய கட்டடம் ஒன்று மீள் புனரமைப்புச் செய்யப்படுகின்றது. இதில் மேற்படி திருச்சபைச் சூழலை அண்டிய தாய் வாழ்ந்துவரும் கல்விகற்கும் ஏழைச் சிறார்களுக்கான இலவச உணவுடன் கூடிய கற்றலக விடுதி ஒன்று இயங்கவுளளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (யே-49)

### மேன் முறையீட்டு மனு விசாரணைக்கு

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ முகாம் படுகொலை தொடர்பான வழக்கில் வழங்கப்பட்ட மரண தண்டனைத் தீர்ப்புக்கு எதிரான மேன் முறையீட்டு மனு நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர் சரத்என்.சில்வா தலைமையிலான 5 நீதியரசர்கள் கொண்ட நீதிபதிகள் குழு, மேற்படி மனுவை எதிர்வரும் ஜுன மாதம் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுப்பதென திர்மானித்துள்ளது.

2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 27 பேர் படுகொலை செய்யப்பட்டு, 14 பேர் காயப்படுத்தப்பட்டனர்.

மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கில் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் உட்பட ஐவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. மேற்படி மரணதண்டனைக்கு எதிராகவே மேன் முறையீடு செய்யப்பட்டிருந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (ச)

### மூன்று சக்கர வண்டி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் மேற்கைச்சேர்ந்த ஊனமுற்ற ஒருவருக்கு இந்து கலாசார அமைச்சினால் மூன்று சக்கர வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

வறுமைக்கோட்டின கீழ் வாழும் மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த போகராஜா ஜனனி என்பவருக்கே இவ் வண்டி வழங்கப்பட்டுள்ளது. (உ-4)

### பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடாத்தும் சைவ சயம அறிவுப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்குத் தோற்றுகின்ற தரம் 7 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் இருந்து யா/ இந்துக்கல்லூரிக்கு மாற்றப் பட்டுள்ளதாகவும், பரீட்சைக்குரிய நேரத்திற்கு சமுகம் தருமாறும் அதன் செயலாளர் அறிவித்துள்ளார். (உ)

### பரிசளிப்பு விழா

(பொன்னாலை)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்தால் நடாத்தப்பட்ட கண்ணிவெடி அபாயக்கல்வி தொடர்பான கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது,

இந் நிகழ்வில் யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதி கோனாஜ் வெலிவ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (உ-49)

### பேருந்து தரிப்பிடமில்லை

(மண்கும்பான்)


பேருந்து தரிப்பிட வசதியற்ற நிலையில், மண்கும்பான் பகுதி மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி பகுதியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கிய பல வருடங்களாகியும் இதுவரை பேருந்துத் தரிப்பிடம் ஒன்று அங்கு அமைக்கப்படவில்லை.

இதனால் பயணிகள் கடும் வெய்யிலிலும் மழையிலும் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாக தெரியவருகிறது.(உ-53)

# சாஸ்திரத்தில் கூறப்பட்ட ஆசாரங்களே எமது வாழ்விற்கு அடிப்படையாக வேண்டும்

தர்மம் என்பது உலக நலத்திறாக செய்யப்படவேண்டியது. துளிகூட சொந்த விருப்பு வெறுப்பு



இல்லாமல், எல்லாப் பிராணிகளும் நலமாக இருக்க வேண்டுமென்ற ஒரே சிந்தனையோடு, மகான்கள் தர்ம நூல்களைத் தந்திருக்கிறார்கள். தர்ம சாஸ்திரங்கள் இன்னது தர்மம் என்று தீர்மானம் செய்கின்றன. ரூபத்தை அறிவதற்கு பிரமாணம் கண். சப்தத்தை அறிவதற்கு பிரமாணம் காது. தர்மப் பிரமாணம் என்னவெனில் தர்ம சாஸ்திரப் பிரகாரம் செய்வதே ஆகும்.

**தர்மத்தின் மூலகர்த்தா**

சகல தர்மத்திற்கும் மூலம் வேதம். சுருதி என்பார்கள். எழுதிப் படிக்காமல், காதால் கேட்டுப் பாடம் பண்ணுவதால், இப்படிப் பெயர். சுருதிக்குப் பின்பு ஸ்மிருதி. என்பது வேதத்தின் விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு, விரிவாகச் சொல்லப்பட்ட குறிப்புகள். தர்ம சாஸ்திரம் என்பதும் இதுவே. அந்த ஸ்மிருதிக்குப் பின்பு, பெரியவர்களுடைய நடத்தை; பெரியவர்கள் எப்படி நடந்தார்கள் என்பது புராணங்களால் நமக்குத் தெரிய வருகிறது. அதற்குப் பிறகு, நமக்குத் தெரிந்தது சிஷ்டராக இருப்பவர்களின் நடத்தை. அதை சிஷ்டாசசாரம் என்று சொல்லுவார்கள். எல்லோருடைய நடத்தையும் பிரமாணம் ஆகாது. நம்மிடையே வாழ்பவர்களில் சிலரது நடத்தை தார்மீக விஷயங்களில் பிரமாணமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. அத்தகையோருக்கு சாஸ்திர நம்பிக்கை இருக்கவேண்டும். சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஆசாரங்களை அவர்களே வாழ்வில் அனுசரிக்கவேண்டும். காம குரோதம் இல்லாதவர்களாக இருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட சிஷ்டர்களுடைய ஆசாரம் ஒரு பிரமாணம் ஆகிறது.

அதற்குப் பின்பு நம்முடைய மனசாட்சி நம்முடைய மனம் நிஷ்களங்கமாக எப்படி ஆலோசிக்கிறதோ அதுவே பிரமாணம். ஆகவே, ஆத்மீக, தார்மீக மத விஷயங்களில் பிரமாணங்களைக் கொள்ளும் முறையில் முதலில் வேதம் இடம்பெற வேண்டும். அதற்குப் பிறகு தர்ம சாஸ்திரம் இடம் பெற வேணடும். அதன் பின் அபூர்வ கால ரிஷிகள முதலியவர்களின் நடத்தை இடம்பெறுகிறது. பின்பு, இப்பொழுதுள்ள சிஷ்டர்களின் ஆசாரத்தை பிரமாணமாக கொள்ளலாம். இவைகளுக்கெல்லாம் அடுத்து கடைசி பக்ஷமாகத்தான் சாஸ்திர விஷயங்களில் மனசாட்சியை பிரமாணமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**மனச்சாட்சி என்பது என்ன ?**

இப்பொழுது எல்லாம் தலை கீழாக மாறிவிட்டன. முதலில் மனச்சாட்சியைத் தான் பார்க்கிறார்கள். கடைசியில்தான் வேதத்தைக் கவனிக்கிறார்கள். நியாயப்படி வேறு ஒரு மார்க்கமும் இல்லாத போது தான், மனச்சாட்சியை அனுசரிக்க வேண்டும். மனச்சாட்சி என்று ஏன் அதற்கு பெயர் வந்தது?

அது சாட்சி சொல்லத்தான் யோக்யதை உடையது. நியாயாதிபதியாக இருக்க அதற்கு யோக்யதை இல்லை.

சாடசியாக வந்தவன், வாயால் பொய்யைச் சொல்லுவான். ஆனால் வாய் சாட்சியை நம்புவதற் கில்லை. ஆனால, மனம் பொய்சொல்லாது. மனசுக்கு எல்லாம் நிஜமாகத் தெரியும்.

"நெஞ்சையொழித்தொரு வஞ்சகமில்லை" என்று ஔவைப்பிராட்டி சொன்னாள். அதை சாட்சியாக வைக்கலாம். இப்பொழுது மனச்சாட்சியை தர்ம விஷயங்களில் நீதிபதியாகவே வைத்துவிடுகிறார்கள். இன்னது நடந்தது என்பதை நிஜமாகவே அது சொல்லும். இது தான் நியாயம் என்று அதனால், தீர்மானித்துச் சொல்லமுடியாது. தான் நினைப்பதே சரியென்று எப்படியாவது சமாதானம் சொல்லி நிலைநாட்டிக் கொள்வதே, அவரவர் மனதும் செய்கிற முடிவாக இருக்கும்.

இது எப்படி தர்ம நியாயமாகும்?

எனவே, மனச்சாட்சிக்கு எப்படித் தோன்றுகிறதோ அப்படிச் செய்வேன் என்று சொல்வது தப்பு. எடுத்தவுடன் அதற்கு நீதிபதி ஸ்தானம் கொடுத்து விடக்கூடாது. ஒருவித வழியும் இல்லாமல் போனால், "நீ தான் சாட்சியாக இருந்து, எல்லாவற்றையும் பார்த்திருக்கிறாயே, இப்பொழுது உன் அபிப்பிராயத்தை சொல்" என்று மனதிடம் கேட்கலாம். மனம் ஒரு தனி மனிதனைச் சேர்ந்தது. எனவே, அது எவ்வளவு தூரம் அவனது சுயநலத்தை விட்டு விலகிப்பேசும் என்று சொல்ல முடியாது. சொந்த விஷயங்களில் அதற்குத் தருகிற இடத்தைக் கூட சமய விடயங்களில் தருவதற்கில்லை. தனி மனம் என்ற நிலைக்கு மேலே போய், முழுக்க முழுக்க லோக நலத்தையே சொன்ன ரிஷிகளின் அபிப்பிராயந் தான் தர்ம விஷயங்களில் பிரமாணம் ஆகும். □

## வெள்ளி நற்சிந்தனை

**காஞ்சி காமகோடி பரமாச்சாரியார்**

## இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி ஜெய நீராவி வீரகத்தி விநாயகர் ஆலய மண்டலாபிஷேக விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் இசை ஆராதனையில், நான்காம் நாளான இன்று சி.கஜவதனனின் புல்லாங்குழல் இசை பக்க வாத்தியங்கள் சகிதம் இடம்பெறவுள்ளது. (உ-18)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இலங்கை அதிபர் சேவை தரங்களைச் சேர்ந்தவர்களும, இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு 1, வகுப்பு 2-1ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப்படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு விண்ணப்பங்களை எதிர் வரும் 10ம் திகதிக்கு முன் வலயக கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கேட்டுள்ளார். (ச)

## சிற்றூழியர்கள் வெளிநடப்பு

(மருதங்கேணி)

10 வருடங்களுக்கு மேலாக கிளிநொசசி அஞ்சலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றும் 21 பேர், இதுவரை தமக்கான நிரந்தர நியமனங்கள் வழங்காமையை ஆட்சேபித்து எதிர்வரும் மார்ச்மாதம் 1ஆம் திகதி முதல் 3 நாட்கள் வெளி நடப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

மேற்படி ஊழியர்கள் தமது நிலை தொடர்பான மகஜர் ஒன்றை கிளிநொச்சி அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளனர். (உ-35)

# உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி வேலை நிறுத்தம்

(புதுடில்லி)

அரச ஊழியர்கள் வேலை நிறுததம் செய்யக் கூடாது என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வேலை நிறுத்தத்தால் பொதுத் துறை, வங்கிகள், பொது நிறுவனங்கள், அரசு சாபு நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலைகள் பாதிக்கப்பட்டன.

மேற்கு வங்கம், கேரளா ஆகிய மாநிலங்களில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

புதுடில்லியில் பொதுத்துறை நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இந்த வேலை நிறுத்தத்தில் ஐ.எம்.பி.சி., பி.எம்.எஸ். முதலிய தொழிற் சங்கங்கள் பங்கேற்கவில்லை. அத்தியாவசிய சேவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டதால் அவை பாதிக்கப்படவில்லை.


வேலை நிறுத்தத்தில் பங்கேற்ற தொழிற்சங்கங்களின் தலைவர்கள் இந்த வேலை நிறுத்தம் முழுமையாக நடைபெற்றதாகக் கூறினார்கள்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாகத் தமிழகத்தில் வங்கிகள், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகள் பாதிக்கப்பட்டன.

வருமான வரித்துறை, கணக்குத் தணிக்கையாளர் அலுவலகம் போன்ற மத்திய அரசு நிறுவனங்களின் ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். தொழிற்சாலைகளில் பணிகள் பாதிக்கப்பட்டன.

சென்னையில் மார்க்ஸிஸ்ட் கட்சி சட்ட மன்ற உறுப்பினர் மகேந்திரன் தலைமையில் 1000 க்கும் மேற்பட்டவர்கள் மறியல் செய்ய முயன்ற போது காவல்துறையினரால் ்கைது செய்யப்பட்டனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் தமிழக அரசு ஊழியர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. எனினும தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள். (து)



பொடா சட்டத்தின் கீழ் கைதாகி பிணையில் விடுதலையான ம.தி.மு.பொதுச் செயலாளர் வைகோ தினமும் பொடா நீதி மன்றத்தில் ஆஜராகிவருகிறார். பொடா நீதிபதி நேற்று முன்தினம் விடுமுறை என்பதால் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள பொடா நீதி மன்றத்தில் ஆஜரானபோது.

# எஸ்மா சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு

(சென்னை)

தங்கள் மீது 'எஸ்மா' சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று ஊழியர் சங்கத்தின் சாாபில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுளளது.

இந்த மனு நீதிபதி ரவிராஜ பாணடியன் முன்னிலையில் விசாரணைகது வந்த போது அரச தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மனுமீதான விசாரணை முடிவடையும் வரை எந்தவித நடவடிக்கையும் எடுககப்பட மாட்டாது என்று உறுதியளித்தார்.

இதனைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை இருவார காலத்துககு ஒத்திவைப்பதாகக் கூறிய நீதிபதி, அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார். (து)

# தமிழ் நாட்டிலும் புதுவையிலும் ஒரேநாளில் பொதுத் தேர்தல்

## தேர்தல் ஆணையம் ஆராய்கிறது

(சென்னை)

14 வது மக்களவைக்கான முதற் கட்டத் தேர்தல் ஏப்ரல் 17 ஆம் திகதிக்குப் பிறகு இருக்கக் கூடும் என்று தேர்தல் ஆணையம் சூசகமாகத் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய தேர்தல் ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் ஏ. என்.ஜா தேர்வுகள் முடிந்து தேர்தல்கள் நடைபெறுவதற்கு பள்ளிக் கட்டடங்கள் கிடைப்பதைப் பொறுத்தே தேர்தல் அட்டவணை வகுக்கப்படும் என்றார்.

பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் பள்ளி இறுதித் தேர்வுகள் மருத்துவ, பொறியியல் நுழைவுத் தேர்வு அட்டவணைகள் ஆணையத்திற்கு வந்துள்ளன. அதன்படி கடைசியாக தமிழ் நாட்டில் ஏப்ரல் 16 ஆம் திகதியும் ஒரிஸாவில் 17 ஆம் திகதியும் தேர்வுகள் முடிவடைகின்றன என்று தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தல் 4 கட்டங்களில், ஒவ்வொன்று 4,5 நாள் இடைவெளியில் நடைபெறும் என்று ஏற்கனவே தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது.

தேர்தல் திகதிகள் இவ்வார இறுதிக்குள் அறிவிக்கப்படக் கூடும் என்று ஏற்கனவே தேர்தல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ் நாட்டிலும் புதுவையிலுமாக அனைத்து 40 தொகுதிகளிலும் ஒரே நாளில் வாக்குப் பதிவு நடத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படுமென்று தேர்தல் ஆணையர் டி.வி. டாண்டன் தெரிவித்துள்ளார்.

பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தனித்தனியே நடத்திய சந்திப்புக்குப் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அரசியல் கட்சிகள் இவ்வாறு ஒரேநாளில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருப்பதாக தேர்தல் ஆணையர் டாண்டன் தெரிவித்தார்.

வரும் மக்களவைத் தேர்தலையொட்டி மக்களின் கருத்துக்களை அறிவதற்காக இச் சந்திப்பை ஆணையம் நடத்தியது.

அ.இ.அ.தி.மு.க, தி.மு.க, காங்கிரஸ், பா.ஜ.க., மார்க்ஸிய கம்யூனிஸ்ட், பா.ம.க., ம.திமு.க உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் தேர்தல் ஆணையர் டாண்டன், தேர்தல் ஆலோசகர் ஜே.ஜி ராவ் ஆகியோரைச் சந்தித்து தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். தேர்தல் அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

போலி வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று தி.மு.க, பா.ம.க. மற்றும் இடதுசாரிக் கட்சிகள் வலியுறுத்தின.

புகைப்பட அடையாள அட்டை இல்லாமல் வேறு சான்றுகளுடன் வரும் வாக்காளர்களை அனுமதிக்கக் கூடாது என்றும் அவர்கள் கூறினர். (து)

## இன்று ஒரு தகவல்

# இது என் தொழில்

ஒரு நாள் கடவுள் சாவகாசமாக அமர்ந்திருந்தார். வாயு பகவான அவரிடம் வந்தார். "சிறிது காலம் எனக்கு விடுமுறை தந்தால் நல்லது'' என்றார். "எதற்கு விடுமுறை'' என்று கேட்டார் கடவுள். "பூமிக்குத் தேவையான காற்றைக் கொடுக்க வேண்டியது என் வேலை. அதற்காக தினமும் சங்கு எடுத்து ஊதிக் கொண்டிருக்கின்றேன் ஊதி ஊதி அலுத்துவிட்டது. கொஞ்ச நாள விடுமுறை எடுத்தால் பரவாயில்லை என்று தோன்றுகிறது'' என்றார்.

வருணபகவான் வந்தார்... "காற்று இல்லாவிட்டால் மழையும் கிடையாது. அதனால் நானும் கொஞ்சக் காலம் என்று நினைக்கிறேன்'' என்றார். கடவுள் பார்த்தார் "கலியுகம் முடியவேண்டியிருக்கிறது அதனால் உலகத்தை அழிக்க இது ஒரு நல்ல சந்தர்ப்பம்'' என்று முடிவு செய்தார்.

"சரி...உங்கள் இருவருக்கும் 10 வருடங்கள் விடுமுறை கொடுக்கின்றேன். வாயுபகவான் காற்றுவீச வேண்டாம்! வருணபகவான் மழை பெய்ய வேண்டாம்! உங்கள் தொழிலை விட்டு சிறிது காலம் ஓய்வு எடுங்கள்'' என்றார். சரி என்று கூறிவிட்டு அவர்களும் சந்தோஷமாகப் போய் விட்டனர்.

மழை இல்லாவிட்டால் பூமியில் விவசாயம் எப்படி நடக்கும். 10 வருடங்கள் இப்படியே இருந்து விட்டால் விவசா யம் எப்படி நடக்கும். பசி பட்டினி என்று மக்கள் போய்விடு வார்கள். அதன்பின் புது உலகை, புது மனிதர்களை உருவாக்கலாம் என்பது கடவுளின் திட்டம்.வாயு பகவானுக் கும் வருணபகவானுக்கும் பொழுது போக வேண்டுமே... அதனால் ஒரு மூலையில் இருந்து ஊர்க் கதை பேச ஆரம்பித்துவிட்டனர்.

நாரதர் இதைப் பார்த்தார். அவருக்கு இது பொறுக்க வில்லை "இவர்கள் இருவரும் இப்படி சந்தோஷமாக இருக்கின்றார்களே நாம் எவ்வளவு அவஸ்தைப்பட வேண்டி யிருக்கிறது. எவ்வளவு கஸ்டப்பட வேண்டியிருக்கிறது. எவ் வளவு கெட்டபேர் வாங்க வேண்டியிருக்கின்றது.'' என்று நினைத்து இதைச் சும்மாவிடக் கூடாது என்றும் முடிவு செய் தார்.

உடனே கிளம்பி பூலோகத்திற்கு வந்து விட்டார். வந்து மக்களிடமெல்லாம் உண்மை நிலைவரத்தைக் கூற ஆரம்பித்து விட்டார். "கடவுள் வாயுபகவானுக்கும் வருணபகவானுக்கும் 10 வருடங்கள் விடுமுறை கொடுத்துவிட்டார். அதனால் 10 வருடங்களுக்கு இங்கு மழை பெய்யப் போவதில்லை எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். ஏதோ என்னால் முடிந்தது எனக்குத் தெரிந்த விடயத்தை உங்களிடம் கூறினேன். இனி உங்கள் இஸ்டம்'' என்று கூறி விட்டு போய்விட்டார்.

மக்கள் பார்த்தனர். இன்னும் 10 வருடம் விவசாயம் இல்லாமல் எப்படிக் காலம் தள்ளுவது? அவர்கள் தமக்குக் கிடைத்ததையெல்லாம் எடுத்துப் பத்திரப்படுத்த ஆரம்பித்து விட்டனர். அடுத்தவர்களுக்கு எதுவுமே கொடுப்பதில்லை. எல்லோரும் சுய நலவாதிகளாக மாறிக் கொண்டு வந்தனர். தனக்கு மிஞ்சித் தான் தான தருமம்.

வீட்டுக்கு வீடு நிலைமை இப்படியே ஆகிவிட்டது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனைக் கண்டால் கதைப்பது கூட இல்லை. பேசினால் ஏதாவது கேட்டு விடுவானே! கடவுள் சில காலங்களின் பின் உயரே இருந்து எட்டிப் பார்த்தார். பூமி எப்படி இருக்கிறதென்று! இங்கே எந்தத் தொழிலும் நடக்க வில்லை. வயல் வெளி வெறிச்சோடிப் போய்க்கிடந் தது.

அப்படி இருந்தும் எங்கோ ஒரு மூலையில் ஒரு ஏழை விவசாயி மட்டும் வயலில் ஏர் உழுதுகொண்டிருந்தான். இவன் என்ன பைத்தியக்காரனாக இருக்கிறான். தண்ணியே இல்லாத போது விவசாயம் எப்படி நடக்கும்? அனாவசிய மாக அர்த்தமில்லாமல் இப்படி உழுதுகொண்டிருக்கின் றானே. கடவுள் நாரதரை அனுப்பி அவனை விசாரிக்கச் சொன்னார். நாரதர் வந்து கேட்டார். "விவசாயம் செய்ய முடியாது என்று தெரிந்தும் அனாவசியமாக ஏர் உழுகிறீர் களே!'' என்றார். இதற்கு அந்த ஏழை விவசாயி கூறுகிறார். " இது என் தொழில் இதை நான் மறந்து விடக்கூடாது அல்லவா? இதை நான் மறந்து விட்டேன் என்றால் 10 வரு டம் கழித்து மழை பெய்யும் போது நான் என்ன செய்ய முடி யும்?'' என்றார்.

இது கடவுளின் காதில் விழுந்தது. ஒரு சாதாரண ஏழை விவசாயிக்கு ஒரு மனிதனுக்குள்ள தொழில் பக்தி கூட நமக்கில்லையே என்று நினைத்தார். வாயுபகவானுக்கும், வருண பகவானுக்கும் கொடுத்த விடுமுறையை இரத்துச் செய்தார். அவர்களும் வழக்கம் போல் தொழில் செய்ய ஆரம்பித்தனராம்.

இப்படி ஒரு கதையை நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார். இதில் அர்த்தம் இருந்தது போல் தெரிந்தது. அதனால் உங்களிடம் கூறினேன்.

நமது ஆள் ஒருவன் என்னிடம் கூறினான் ."எனக்கும் தொழில பக்தி உண்டு சார். நான் எங்கே இருந்தாலும் டொச் விட்டுவிடக் கூடாது என்பதற்காக தொழிலை எப்படியாவது செய்து கொண்டு தான் இருப்பேன்'' என்றான். " அப்படியா?'' என்றேன். "ஆமாம் சார் இப்போது கூட நான் ஜெயிலில் தான் இருக்கிறேன். இருந் தாலும் அங்கேயும் திருட்டுத்தொழிலை நான் விடவில்லை'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தேர்தல் ஒன்றின் தேவையை தமிழ்மக்கள் உணர்ந்துள்ளனர்

## தமிழினி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

ஈழ மண்ணின் விடிவுக்காக இரத்தம் சிந்தி வீரச்சாவடைந்த எமது மாவீரர்களின் ஈகத்தினால் நிரந்தர சமாதானம் உருவாவதற்கேற்ற அமைதியான சூழல் உருவாகியிருக்கிறது. இந்த நிலையில் உலகமே வியந்து நிற்கக்கூடிய அளவுக்கு பேரம் பேசும் வல்லமையோடு தமிழ்த் தேசிய இனம் சர்வதேச அரசியல் அரங்கிற்குள் பிரவேசித்திருக்கின்றது.

தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற போராளி எழுத்தாளர் அம்புலியின் " மீண்டும் துளிர்க்கும் வசந்தம்'' எனும் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றுகையில் இவ் வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சிங்கள இனவாதிகள் முன்னர் எம்மீது எவையெல்லாவற்றையும் திணித்தார்களோ அவற்றையெல்லாம் அவர்களுக்கு எதிராக நாம் பயன்படுத்துவதற்கான வல்லமையை எமக்குள் எமது தேசியத் தலைவர் வளர்த்துள்ளார்.

அநத வகையில், யுத்த களத்தில் ஆயுதங்களைக் கையாண்டு நாம் வெற்றிகளைப் பெற்றது மட்டுமன்றி, தற்போதைய சமாதான காலத்தில் சிங்கள இனவாதிகளின் முகத்திரைகளைக் கிழித்து சர்வதேச அரங்கிற்குக் காட்டுகின்ற ஓர் நிலைக்கு வந்திருக்கிறோம்.



தேர்தலின் பரிமாணம் மாறுபட்டிருந்த அன்றைய கால கட்டத்தில் தேர்தல் ஒன்று நடாத்தப்படுவதை வெறுத்து வந்த மக்கள், தற்போதைய கால கட்டத்தையும் மாற்றத்தையும் புரிந்து கொள்ள வேண்டிய சூழ்நிலையும் தேவையும் தற்போது ஏற்பட்டிருக்கின்றது.

அன்று எம்மை அழிப்பதற்காகச் சிங்கள இனவாதிகள் பயன்படுத்திய தேர்தல் என்ற ஆயுதத்தை இன்று அவர்களை எதிர்ப்பதற்காகவே எமது கைகளில் ஏந்தியிருக்கிறோம் நாம் இத்தகைய பெரு வளர்ச்சி கண்டிருப்பதை மக்கள் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார். (உ-35)

# அமைச்சரவைத் தீர்மானத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா ஆப்பு

(கொழும்பு)

தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அமைச்சுக்களில் பிரத்தியேக அலுவலர்களாக சேவையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது என்ற அமைச்சரவைத் தீர்மானத்தை ஜனாதிபதி முற்றாக நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றம் கலைப்புச் செய்யப்பட்டது. இதன் பின்னர் மேற்படி தீர்மானம் அமைச்சரவையால் கடந்த 11ஆம் திகதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது காபந்து அரசாங்கம் விதிமுறைகளுக்கு முரணானது. இலங்கையின் 17வது அரசியல் திருத்த சட்டத்தினபடி இது சட்டவிரோதமானது என்பதைச் சுட்டிக காட்டியே இதனை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

அத்துடன், அமைச்சரவைத் தீமானத்தின் அடிப்படையில் இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டாம் எனவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கபபட்டுள்ளது. (உ-61,4)

## இராசிபலன்

27. 02. 2004

(மாசி 15, வெள்ளிக்கிழமை)

| | |
|---|---|
| சப்தமி | முன்னிரவு 8.36 மணி வரை |
| கார்த்திகை | முன்னிரவு 11.35 மணிவரை |
| இராகுகாலம் | 10.59-12.29 மணிவரை |
| சுபநேரம் | 6.29-7.59 மணிவரை |

*கார்த்திகை விரதம்*

**மேடம்**
கடுமையான முயற்சி, பொருள் விரயம், பெரியோர் சந்திப்பு, கடின வார்த்தை.

**இடபம்**
தெய்வ தரிசனம், விருந்துபசாரம், சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி.

**மிதுனம்**
காரிய அலைச்சல், தனவிரயம், பிரயாணம், போசனசுகக் குறைவு.

**கடகம்**
தெய்வ தரிசனம், தொழில் நன்மை, வாக்கு மேன்மை, குடும்ப மகிழ்ச்சி.

**சிங்கம்**
அதிக பிரயாசை, கருமங்கள் கைகூடும், பெருமையடைதல், உறவினர் சந்திப்பு.

**கன்னி**
கட்டுப்பாடு, இடமாற்றம், புதிய திட்டமிடல், பிதாசிந்தை.

**துலாம்**
கடன் பிரச்சினை, காரிய தடங்கல், உடல் வியாதி, திடீர் நன்மை.

**விருச்சிகம்**
காரிய சித்தி, இலட்சுமிகரம், பொருள் சேர்க்கை, தெய்வதரிசனம்.

**தனுசு**
ஆரோக்கியம், உறவினர்வழி நன்மை, நல்ல வரவேற்பு, போசனசுகம்.

**மகரம்**
போசன நன்மை, சிறு வியாதி, தொழிலில் ஆர்வம், அமைதிக்குறைவு.

**கும்பம**
மனச்சோர்வு, தொழிலில் புதிய திருப்பம், கல்வியில் ஆர்வம், செல்வாக்கு.

**மீனம்**
கூட்டு முயற்சி, தெய்வ சிந்தனை, நல்ல வருமானம், நண்பர்கள் சந்திப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## ஜனவரியில் யாழில் 380 பேருக்கு வாகன அனுமதி பத்திரம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம)

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் இவ்வாண்டின் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 380 பேருக்கு வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக அதன் ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

இவர்களில் 317 பேர் மோட்டார் சைக்கிள், கார் வண்டிகளுக்கான அனுமதிப் பத்திரமும் 63 பேர் பார ஊர்திக்கான அனுமதிப்பத்திரமும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, வாகன அனுமதிப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்து அதற்கான பரீட்சைகளுக்குத் தோற்றி சித்தியெய்துபவர்கள் ஒரு மாதகாலத்திற்குப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும்,

மோட்டார் கார், மோட்டார் சைக்கிள் என்பவற்றுக்கான அனுமதிப் பத்திரங்களைப புதுப்பிகககத் தேவையில்லை ஆனால், கனரக வாகனஙகளுக்கான அனுமதிப்பத்திரத்தை 3 வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்க வேண்டும் எனவும் ஆணையாளர் மேலும குறிப்பிட்டார். (உ-19)

## தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட மத்திய மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கைது

(தம்புள்ள)

மத்திய மாகாண சபை உறுப்பினர் ஒருவர் உட்பட 2 அரசியல்வாதிகளைத் தம்புள்ள பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாரின் அனுமதியின்றி தம்புள்ள விகாரைச்சந்திக்கு அருகே ஒலிபெருக்கிகள் மூலம் தேர்தல் பிரசாரம் செய்ததினாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளையில் இருந்து வாகனத் தொடரணியாக வந்து இவர்கள் இப் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டதுடன்,பொலிஸாரின் அனுமதிப்பத்திரம் பெறாமல் இவர்கள் தமது பதவிகளைப் பயன்படுத்தி பிரசாரம் செய்தமை சட்டவிரோதமானது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-61,4)

## பெற்றோரிடம ஒப்படைப்பு

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் இணையச் சென்ற ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 18 வயதிற்குட்பட்ட சிறுமி ஒருவர், கடந்த செவ்வாய்க்கிழமை முன்தினம் யாழ். மாவட்ட அரசியல் துறையினரால பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

யுனிசெவ்., ஐ.சி.ஆர்.பிரதிநிதிகள் முன்னணியில் இவ் வ்ப்படைப்ப இடம்பெற்றது. (உ)

தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள். -குறள்

வலம்புரி

## வாக்களிப்பதற்கு மக்கள் முன்வரவேண்டும்

எதிர்வரும் ஏப்ரல் 2-ந் திகதி 13வது பாராளு மன்றத்திற்கான பொதுத்தேர்தல் நடைபெறு வதற்கான ஏற்பாடுகள் தயாராகி வருகின்றது.

இரண்டு வருட கால இடைவெளிக்குள் மீண்டு மோர் தேர்தலை மக்கள் எதிர்கொள்வது சலிப்புத் தனமானதோர் நிகழ்வாக இருப்பினும் நடை பெறப்போகின்ற தேர்தல் நாட்டில் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தப்போவது உறுதி.

தேர்தல் மூலம் ஏற்படப்போகின்ற மாற்றங்கள் நேரிய விளைவாகவோ அன்றி எதிர் விளைவா கவோ அமையலாம். இரண்டில் எது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு இலங்கைத் திருநாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் உரியதாகும்.

இதில் சில விடயங்களை முன்வைத்து வாக் காளர்களுக்கு அறிவுரை கூறுவது, அவர்களை ஒரு பக்கம் திசை திருப்புவது என்பன நீதியின் பாற்பட்டது அல்ல என்பதனால் அது விடயத்தில் மௌனமே சரியான அணுகுமுறையாகும்.

எனினும், தேர்தலில் வாக்களிப்பதன் அவசி யம், வாக்களிக்கும்முறை என்பனபற்றி மக்க ளுக்கு எடுத்துக்கூறும் தார்மீகப் பொறுப்பு நடு நிலையாளர்களுக்கும், பொது அமைப்புகளுக்கும் உண்டு.

சுருங்கக் கூறின் இலங்கைத் தேர்தல் வர லாற்றில் 70 வீதமான மக்களின் வாக்களிப்பே அதிகூடிய பதிவாகக் காணப்படுகின்றது. அதா வது 45-65 வீதமான வாக்களிப்புக்களே இலங் கையின் தேர்தல் மாவட்டங்களில் பதிவான சராசரி வாக்களிப்பாகும்.

அவ்வாறாயின் 35-55 வீதமான வாக்காளர்கள், வாக்களிப்பில் பங்குபற்றுவதேயில்லை என்ற உண்மை புலப்படும். இதில் வேதனையும், வேடிக் கையும் என்னவெனில் 45 முதல் 65 வீதமான வாக்களிப்பில் கணிசமான வாக்குகள் செல்லுபடி அற்றவை என்பதாகும்.

இலங்கை கல்வி அறிவில் உயர்ந்த இடத்தில் இருக்கின்ற போதிலும், வாக்களிப்பின் கணிப்பீடு களின் போது செல்லுபடி அற்ற வாக்குகளின் எண்ணிக்கை அதிகப்படியாக இருப்பது கடந்த காலப் புள்ளி விபரங்கள் நமக்குத் தரும் அதிர்ச் சித் தகவல்களாகும்.

அதிலும், கடந்த தேர்தலில் யாழ்.மாவட்டத் தில் இருபதாயிரத்தை அண்மித்த வாக்குகள் செல்லுபடி அற்றவை என்ற உண்மையை ஒரு கணம் நாம் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும்.

ஒரு பகுதி வாக்காளர்கள் வாக்களிப்பில் பங் கேற்காமல் இருக்கின்ற அதேவேளை, வாக்களித் தவர்களில் கணிசமான பங்கினரின் வாக்குகள் செல்லுபடி அற்றவை எனின் நாட்டில் ஜனநாயகம் உருவாகுவது கடினமே.

நாட்டு மக்கள் அனைவரும் தமக்கு இருக்கக் கூடியதான வாக்குரிமையை சரியாக - நிதான மாக பிரயோகிக்கின்றபோதே ஜனநாயகம் உயிர்ப் புப் பெறமுடியும். ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் வாக்களிப்போடு மட்டும் ஆட்சியமைக்கின்ற அரசு களால் எதனையும் சாதிக்க முடியாமல் போகின்ற பரிதாப நிலையை கடந்த கால அரசியல் பட்டறி வுகள் நமக்குப் புகட்டி உள்ளன.

வாக்களிப்பில் பங்கேற்காதவர்கள் பற்றிய ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட முடிபுகள் அதிர்ச்சிக்கு மேலும் அதிர்ச்சி தருவதாக உள்ளது. அதாவது அரசியல் புலத்தைச் சீர்தூக்கி ஆராய்ந்து கொள்ளக் கூடியவர்களும், தேர்தல் முறைமைகள் தெரிந்தவர்களுமே வாக்களிப்பில் பங்கு பற்றாதவர்களாக இருக்கின்றனர்.

நல்லாட்சியைத் தெரிந்தெடுக்கக் கூடிய வர்க்கம் தகவல் ஊடகங்களின் தகவல்களோடு தங்களின் விமர்சனங்களை நிறைவுசெய்துவிட்டு தேர்தலை ஒதுங்கி நின்று பார்த்துக்கொள்கின்றனர்.

இதனால் தமது சுயநலனை மட்டும் கருத்திற் கொண்டு வாழ்ந்துவரும் வர்க்கம் ஆட்சியைத் தீர்மானித்து விடுகின்றது. எனவே இத்தகை யதொரு கீழ்நிலை முற்றாக நீக்கப்படவேண்டும்.

மக்கள் அனைவரும் தங்களின் வாக்குரிமைக ளைப் பயன்படுத்த முன்வர வேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் தமக்கு இருக்கக் கூடிய வாக்குரிமைகளைப் பயன்படுத்துகின்றபோது வாக்களிப்பில் ஏற்படக் கூடிய மோசடிகள், தில்லுமுல்லுகள் என்பனவும் முற்றாகத் தடுக்கப்படும் என்பதோடு நாட்டில் ஜனநாயக ஆட்சி மலர்வதற்கும் அது வழிவகுக்கும்.

# போரா? சமாதானமா? எனப் பொது மக்களை அங்கலாய்க்க வைப்பதற்கே பொதுத்தேர்தல்

## புளொட் தலைவர் அறிக்கை

(வவுனியா)

நாட்டில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானத்திற்கான பேச சுக்கள் ஆரம்பமாகிய வேளையில் தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகள் யாவும் பலவீனப்படுத்தப் பட்ட நிலையில் போரா? சமாதானமா?என்று எமது மக்களை அங்கலாய்க்கவைக்கும் விதத்தில் மிகவிரைவாக பொதுத் தேர்தலொன்று திணிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்)தலைவர் த.சித்தார்த்தன் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும்,

கடந்த காலங்களில் தேர்தல் நடந்த ஒவ்வொரு சந்தர்ப் பங்களிலும், தமிழ் கட்சிகளிடையே மேற்கொள்ளப்பட்டு வந்த ஒற்றுமை முயற்சிகளும், கழுத்தறுப்புகளும், புறக்கணிப் புகளும் சர்வதேசம் உட்பட யாவரும் அறிந்தவையே.

இம்முறையும் பல்வேறு தரப்பினரின் சுயமுயற்சிகளூடாக ஒற்றுமைக்கானதும், பொது அரசியல் வேலைத்திட்டத்திற் கானதுமான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டபோதும், குறிப்பிட்ட சில தரப்பினது சூழ்ச்சிகரமான நடவடிக்கை களினாலும், அழுத்தங்களினாலும் தமிழ் கட்சிகள் பிரிந்து நின்று தேர்தலுக்கு முகம் கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நாமும் இயன்றளவில் ஒற்றுமை முயற்சிக்காகவும், பொது வேலைத் திட்டத்திற்காகவும் எமது தனித்துவத்தை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு, சகல வழிகளிலும் பாடுபட்டோம். இருந்தும் திட்டமிட்ட வகையில் எமது முயற்சிகள் உதாசீனப படுத்தப்பட்டும், காலதாமதப்படுத்தப்பட்டும் தோல்வியில் முடிக்கப்பட்டுவிட்டன.

பாராளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் தமிழ் மக் களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகள் குறித்த செயற் பாடுகள் ஒருமுகப்படுத்தப்பட்டே முன்னெடுக்கப்பட்டு வந் திருக்கின்றன.

1994ல் எமது அமைப்பு வவுனியா நகரசபைத் தேர்தலில் போட்டியிட்டபோது அத்தியாவசியப் பிரச்சினையைவிட அரசியல் தீர்வே முதன்மையானது என்று கூறி பகிஷ்கரித்த தமிழ்க்கட்சிகள் பலவும் இன்று அத்தியாவசியப் பிரச்சினை களை முதன்மைப்படுத்தி அரசியல் தீர்வுகாணும் நடை முறைக்குக் காலம் தாழ்த்தியேனும் வந்திருப்பதை நாம் வரவேற்கிறோம்.

குறுகிய ஆயுளைக் கொண்டிருந்த கடந்த பாராளுமன் றக் காலத்தில் எமது மக்களின் அரசியல் பிரச்சினைகளை வலியுறுத்துவதிலும், சமாதான சூழலை உறுதிப்படுத்துவதும், நடவடிக்கைகளுக்கு வலுச்சேர்ப்பதிலும் நாம் சோர்ந்துபோய் விடவில்லை. ஆரோக்கியமான பங்களிப்பை கணிசமான அளவில் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் வழங்கியிருந்தோம்.

புலிகள் சமர்ப்பித்திருந்த இடைக்கால நிர்வாகசபைக் கான திட்டவரைபைத் தமிழ்மக்களுக்கான நிரந்தரத் தீர்வைக் கருத்தில்கொண்டு நாம் வரவேற்றிருந்தோம். அதேவேளை தமிழ்மக்களின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் பேணப்படவேண்டிய ஜனநாயகப் பன்முகத் தன்மை பற்றியும் மீண்டும் வலியுறுத்தியிருந்தோம்.

அரசியல் தீர்வுக்கான அடிப்படையாக தமிழ்மக்கள் உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கும் திம்புக்கோட்பாடு களை உருவாக்குவதில் உறுதியான பங்களிப்பை வழங்கி யிருந்த போராட்ட அமைப்பினராகிய நாம், இன்றுவரை அத் தீர்மானங்கள் மீது அர்ப்பணிப்புடனேயே எமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

அதேவேளை, எமது பிரதேசத்தில், கடந்த அரசாங்கத் தின் இயலாத்தன்மைக்கும் உளளூர் அரச அதிகாரிகள், பொதுஅமைப்புக்கள் மேல் உருவாக்கப்பட்டிருந்த தூர நோக்கற்ற அநாவசிய அழுத்தங்களுக்கும் மத்தியில் இயல்புவாழ்வைத் தோற்றுவிக்கக்கூடிய பயன்மிக்க அபிவிருத்தித் திட்டங்களைப் பல்வேறு மட்டங்களிலும் மேற்கொண்டிருந்தோம். இதை சம்பந்தப்பட்ட பிரதேச மக் களும் மக்களால் பாராளுமன்றத்திற்கும் தெரிவுசெய்யப்பட்டு சுயமாக எதையும் செய்ய இயலாது தவித்து தனிமைப் பட்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், அவர்கள் சார்ந்த அமைப்புக்களும் நன்கு அறிவர்.

உரிமையை கோரிநிற்கும் எமது மக்களின் அபிலாஷை களை உறுதியாக வலியுறுத்தவும், பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் உங்கள் ஆதரவை மீள உறுதிப்படுத்திக்கொள்ளவே நாம் விரும்புகிறோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (உ-13)

## வட்-கிழக்கில் இடம்பெற்றது தீவிரவாதப் போராட்டமே

### எல்லாவெல மேதானந்த தேரர்

(திரிபத்கொட)

வடக்கு-கிழக்கில் இடம்பெற்றது தீவிரவாதப் போராட் டமே. இதனைச் சில அரசியல் வாதிகள் தமது சுயலாபத் திற்காக இனப்பிரச்சினை என பிரசாரம் செய்துவந்துள் ளனரென எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள் ளார்.

திரிபத் கொடவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையிலே,

கடந்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்றது இனப் பிரச்சினை அல்ல தீவிரவாதத்திற்கெதிரான யுத்தமே இடம்பெற்றது. இதனை அரசியல் வாதிகள் இனப்பிரச் சினையாகச் சித்தரித்தனர்.

இத்தீவிரவாத யுத்தத்தை முறியடிப்பதற்கு இராணுவத் தினருக்கு சிறந்த தலைமைத்துவம் வழங்கப்படவில்லை. மாறாக இவ் யுத்தத்தை அரசியல்வாதிகள் தமது இலா பத்திற்காகவே பயன்படுத்தினர்.

தமமைச் சிங்களவர்கள் எனக்காட்டிவந்துள்ள அரசியல் வாதிகள் மக்களை ஏமாற்றிவிட்டனர். எனவே அரசியல் வாதிகளைத் தேர்ந்தெடுப்பதில் சிங்கள இனம் விழிப்பாக இருக்கவேண்டும் என்றார். (உ-61,4)

## தேர்தல் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

படையினரே நீங்கள் உங்கள் வீட்டுக்குப்போங்கள், நாங்கள் எங்கள் வீட்டுக்குப்போகவேண்டும் என்ற வாசகங் கள் கொண்ட தேர்தல் பிரசார சுவரொட்டிகள் யாழ்ப்பாண நகரத்தின் பல இடங்களிலும் நேற்று முன்தினம் ஒட்டப் பட்டுள்ளன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரான எம்.கே. சிவாஜிலிங்கத்தின் படம் அச்சிடப்பட்ட இச்சுவரொட்டி பச்சை, மஞ்சள், சிவப்பு நிறங்களில் காணப்படுவதுடன், வீட்டுச்சின்னத்திற்கு அருகே புள்ளடியும் போடப்பட்டுள்ளது.

யாழப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக ஒட்டப்பட்ட முதலாவது சுவரொட்டி இது வாகும். (உ-17)

## தினசரி தியானம்

### விவேகச்சிந்தனைகள்

ஸ்ரீராமகிருஷ்ணர் நடு நிசியில் எழுந்து எவரும் அறியாதபடி தாழ்ந்தவன் என்று கருதப படும ஒருவனின் மலம் கழிக்கும் இடத்தைச் சுந் தம் செய்து, அவ்விடத்தைத் தம் தலைமயி ரைக கொண்டு துடைத்தார். தம்மை எளியோர் க்கும் எளியவராக ஆக்கிக் கொள்வதற்காகப் பல தரம் அவர் அம்மாதிரிச் செய்தார். அம்மஹானு பாவரின் பாதங்களையே சிறியவனாகிய நான் எப்போதும் என் தலை மீது தாங்கி நிற்பேன்.

சுவாமி விவேகானந்தர்.

## ரயில் சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)

ரயில்கள் பலவற்றின் வேகக் கட்டமைப்புச் செயற்பாடு கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.இதனால் கடந்த செவ் வாய் கிழமை முதல் பல ரயில் சேவைகள் இடைநிறுத் தப்பட்டுள்ளன.

ரயில்வே ஊழியர்கள் அதிகாரசபையைத் திணைக் களமாக மாற்றக்கோரி போராட்டம் செய்த காலகட்டத்தில், ரயில் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள் ளன. இதன் காரணமாகவே ரயில்கள் பலவற்றின் வேகக் கட்டமைப்புக்களில் பழுது ஏற்பட்டுள்ளன. (தி-61)

## 6 கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் களுக்கான விருப்பு இலக்கங்கள் இன்னும் ஓரிரு தினங் களில் வெளியிடப்படவுள்ளன.

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு 22 தேர்தல் மாவட்டங்களில் வேட்புமனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

196 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய் வதற்காக நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் 24 கட்சி கள், 192 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இவற்றில் 6 அரசியல் கட்சிகளினதும் 5 சுயேட்சை குழுக்களினதும் வேட்புமனுக்கள் தேர்தல் திணைக்களத் தினால் நிராகரிக்கப்பட்டுள்ளன. அம்பாநதோட்டை, மட்டக் களப்பு, திருகோணமலை, பதுளை ஆகிய மாவட் டங்களில் இவ்வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. (தி-16)

## தவக்கால சிந்தனை-03

ஒரு வீட்டுத்தலைவி எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் நோன்பு இருப்பார். வெள்ளிக் கிழமைகளில் பணிப் பெண்ணை வீட்டைக் கழுவி சுத்தம் செய்யச் சொல்லுவார். ஒரு வெள் ளிக்கிழமை பணிப் பெண் தாமதமாக வந்து, தனக்கு தலைவலி, காய்ச்சல் இருப்பதால் விடுப்பு கேட்டாள், வீட்டுத் தலைவிக்கு கோபம் வந்து விட்டது. காய்ச் சலுகககு மாத்திரையைப் போட்டுக் கொள்ளச் செய்து வேலை வாங்கினார். இது நோன்பாகுமா? நோன்பு தன்னிலே பொருள்அற்றது. சரியான கர்ரணங்களுக்காகச் செயதால் தான் அது பொருள் பெறும். திருமுழுக்கு யோவானின் சீடர்கள் மெசியாவின் வருகைககாக தங்களைத் தயா ரிக்க நோன்பு மேற்கொண்டனர். மெசியாவோடு வாழும் இயேசுவின் சீடர்களுக்கு அது தேவையற்றது. எத்தகைய நோன்பு இறைவனுக்கு ஏற்றது என எசாயா முதல் வாசகத்தில் கூறுகிறார்.

1.பசித்தோருக்கு உணவைப் பகீர்ந்து கொடுத்தல்.
2.இருக்க இடமில்லாதோருக்கு நம் வீட்டில்இடமளித்தல்.
3:ஆடையற்றவர்க்கு ஆடையளித்தல், நம் தவக்கால நோன்பு இந்தப் பரிணாமம் எடுக்க வேண்டும்.இறைவா எம் நோன்பால் ஏழையர் வாழ்வு பெறச் செய்தருளும்.

காவலன

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

## ஐ.ம.சு.மு...

நடைமுறைக்கு எதிர்மாறாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்திருப்பின் நாட்டின் சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து அவர்களின் கருத்துக்களையும் பெற்று சமாதானப் பேச்சுவார்த்தை உடனடியாக ஆரம்பிக்கப்படும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த இரு தசாப்த காலங்களாக யுத்தத்தில் ஈடுபட்டிருந்த விடுதலைப் புலிகள் முதல் தடவையாக யுத்தநிறுத்த உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத் திட்டமை வரவேற்கத்தக்கதொரு முக்கிய நிகழ்வாகும்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து மக்களின் அபிப்பிராயங்களை நியாய வழியில் பெற்று அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்தல் முறை மாற்றியமைக்கப்படுவதுடன் அரசாங்கக் கட்டமைப்பு ஒன்றினைக் கட்டியெழுப்பி நியாயமான நல்லதொரு ஆட்சிமுறையை ஏற்படுத்தும் வகையிலான அரசியல் அமைப்பும் உருவாக்கப்படும்.

நாட்டில் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு கலப்புப் பொருளாதார முறையை அறிமுகப்படுத்தி அதன் கீழ் சமூகத்தின் வாழ்வு நிலையையும், உற்பத்தியையும் மேம்படுத்தும் உறுதியான பொருளாதார கொள்கையொன்றைக் கட்டியெழுப்பி அனைவருக்கும் சமமான பொருளாதார நலன்களையும் ஐ.ம.சு.மு வழங்கும் அதே வேளை பௌத்த தர்மத்தைக் கட்டிக்காத்து போஷிப்புடன் அதற்கு இசைவாக இதர மதங்களும் தடங்கலின்றிபின்பற்றும் உரிமையினையும் எமது முன்னணி உறுதி செய்யும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இக் கூட்டத்தில் முன்னாள் எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க, தினேஸ் குணவர்த்தனா, விமல் வீரவன்ச ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ)

ஈ.பி.டி.பியின்

# பிரசார வாகனம் தீ மூட்டி எரிப்பு

(மன்னார்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினுடைய பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்று இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை மன்னார் சென்போல் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மேற்படி கட்சியின் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட இவ் வாகனம் உரிமையாளரின் வீட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்தபோது அங்கு வந்த இனந்தெரியாத சிலர் பெற்றோல் ஊற்றிக கொளுத்தியதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், வேட்பாளருமான இ.ஹரிசந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மன்னார் மாவட்டத் தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற முதலாவது தேர்தல் வன்முறைச் சம்பவம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ-61,4)

## வலைபந்தாட்டத்திலும் யாழ்.அணிசம்பியன்

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய விளையாட்டு விழாவில் நேற்று நடைபெற்ற வலைபந்தாட்டப் போட்டியில் யாழ்.அணி சம்பியனானது.

மன்னார் அணியுடனான இப்போட்டியில் யாழ்.அணி 60:32 என்ற கணக்கில் வென்றது.

இதேவேளை திருமலை அணிக்கும் யாழ்.அணிக்கும் இடையில் நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டியில் திருமலை அணி 25:22, 25:22, 25:18 என்ற செற் கணக்கில் வென்றது.

(ச-68)

## கூட்டமைப்பின் பிரசாரம் வவுனியாவில் ஆரம்பம்

(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரம் நேற்று வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா கலைமகள் விளையாட்டரங்கில் மாலை 5 மணிக்கு ஆரம்பமான மேற்படி பிரசாரக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

(த-13)

## வாக்காளர்...

அட்டைகள் மற்றும் வாக்குச் சீட்டுக்களும், விமானங்க்ள் மூலம் எடுத்துச் செல்லப்பட விருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஏனைய பாகங்களுக்கு, பேருந்துகள் மூலமும், தொடருந்துகள் மூலமும் வாக்காளர் அட்டைகள் எடுத்துச் செல்லப்படும் எனவும், இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பொலிஸ்மா அதிபர் உறுதியளித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (த)

## நேற்று மட்டும்...

இதேவேளை கடந்த 17-ந் திகதி முதல் நேற்றுவரை தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 116 முறைப்பாடுகள் பொலிஸ் தேர்தல் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும்,

இவற்றில் ஐ.தே.க. 38 முறைப்பாடுகளையும், பொ.ஐ.மு.18 முறைப்பாடுகளையும் மக்கள் விடுதலை முன்னணி 16 முறைப்பாடுகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 33 முறைப்பாடுகளையும் ஏனைய கட்சிகள் 11 முறைப்பாடுகளையும் செய்துள்ளன.

(ம)

கேபிள் தொலைபேசிகளுக்கான

# புதிய கட்டண அறவீட்டுக்கு எதிராக தடையுத்தரவு

(கொழும்பு)

கேபிள் மூலமான இணைப்புத் தொலைபேசிகளில் இருந்து கையடக்கத் தொலைபேசிகளுக்கு எடுக்கப்படும் அழைப்புகளுக்கு இணைப்புத் தொலைபேசி பாவனையாளர்களிடமிருந்து புதிய கட்டண அறவீட்டை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது.

ஹேரகந்தரப் பகுதியைச் சேர்ந்த இணைப்புத் தொலைபேசிப் பாவனையாளர் ரி.பதுவங்கல தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது. அடுத்தமாதம் 11 ஆம் திகதி வரை இத்தடை உத்தரவு அமுலில் இருக்கும் என நீதிபதி தெரிவித்தார்.

புதிய கட்டணமுறை அறவீட்டின் காரணமாக கே[illegible]ள் இணைப்புத் தொலைபேசி [illegible]வனையாளர்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி இருப்பதாக ரி.பதுவங்கல அம்மனுவில் குறிப்பிட்டிருந்தார். இம்மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள தொலைத்தொடர்பு ஆணைக்குழு அதிகாரியை நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.(ம)

## இனப்பிரச்சினை...

இந் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவோ, யுத்தத்திற்கு தீர்வு காண்பதற்காகவோ, தெளிவான செயற்திட்டம் எதனையும் இதுவரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மக்களிடம் சமர்ப்பிக்கவில்லை.

நாடு யுத்தத்தினால் சின்னாபின்னம் அடைந்த நிலையில் பொருளாதாரத்தில் எந்தவிதமான அபிவிருத்தியையும் காணாத ஒரு இக்கட்டான நிலையிலேயே ஐக்கிய தேசிய முன்னணி நாட்டைப் பொறுப்பேற்றது. இந் நிலையில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் இத் தேர்தல் மூலம் மக்கள் தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.(ம)

## தமிழ்ச்செல்வன்-ஹெவ்டே சந்திப்பு

(கிளிநொச்சி)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்பியுறுஹெவ்டே நாளை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல்துறை நடுவச் செயலகத்தில் முற்ப[illegible] 11 மணியளவில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது. (இ)

## சத்திரச் சந்தி...

கப்பட்டுள்ளது.

உரியவர்கள் இனங்காட்டி சடலத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை சம்பந்தப்பட்ட லொறியின் சாரதியான சங்கானையைச் சேர்ந்த சபாரட்ணம் மகேந்திரன் நேற்று முன்தினம் பொலிஸில் சரணடைந்தார். பொலிஸார் அவரை நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவரை எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி ஆ.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (த-3,4)

வண்ணை - சாந்தையர்மடம்
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்
சைவசமய அபிவிருத்திக் கழகம் சைவசமய அறிவுப்பரீட்சை – 2004
பரீட்சை நிலைய இடமாற்றம்
29.02.2004 ஞாயிறு நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் தரங்கள் 8,9,10,11,12,13 மாணவர்களுக்கான பரீட்சை நிலையம் யா/யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரியிலிருந்து யா/யாழ். இந்துக் கல்லூரிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.
மாணவர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
கௌரவ செயலாளர்
வைசமய அபிவிருத்திக் கழகம்
(8285)

யாழ்ப்பாணத்தில் 72 வருடகால அனுபவம் பெற்ற மதுபான
விற்பனையாளர்கள் மீண்டும் வாடிக்கையாளர் நலன் கருதி
243, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் விற்பனையை ஆரம்பித்துள்ளார்கள்
உள்நாட்டு வெளிநாட்டு மதுபான வகைகளை பெற்றுக்
கொள்ள நாடுங்கள்
ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
243 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
ஸ்தாபிதம் - 1932
(சி-7352)

சீனி விற்பனைக்கு
இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி
செய்யப்பட்ட சீனி விற்பனைக்குண்டு.
50 kg எடையுள்ள மூடை - 1750/=
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:–
ஈஸ்வரபகவான் அன் கம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2350
(C/7297)

கொங்கிரீட் என்றால்
மிட்சுயி
ஹினோடே



இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.